Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 39
கதிர் : 341

சனிக்கிழமை
02 நவம்பர் 2024

ஐப்பசி 16
வள்ளுவர் ஆண்டு 2055

பக்கங்கள் – 16
விலை – ரூபா 50




# பயங்கரவாதத் தடைச்சட்டம் நீங்கும் மாகாணசபைத் தேர்தல்கள் நடக்கும்

தேசிய மக்கள் சக்தியின் யாழ்ப்பாண அமைப்பாளர் தெரிவிப்பு



**யாழ்ப்பாணம், நவம்பர் 2**

**தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்தால், பயங்கரவாதத் தடைச் சட்டம் நிச்சயம் நீக்கப்படும் என்று அந்தக் கட்சியின் யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கான அமைப்பாளர் இராமலிங்கம் சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.**

15

## அச்சுவேலி - வயாவிளான் வீதியின் ஒருபகுதி விடுவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 2

அச்சுவேலி - வயாவிளான் வீதியின் ஒரு பகுதி நேற்றுக் காலை விடுவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், பலாலி வீதி - வயாவிளான் சந்தி - தோலகட்டி சந்தி வரையிலான வீதியில் ஒரு கிலோமீற்றர் பகுதியே, 34 வருடங்களுக்குப் பின்னர் மக்களின் போக்குவரத்துக்காக நேற்றுத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

15

## வீதியின் பெரும்பகுதி இன்னமும் இராணுவத்தினரின் பிடியிலேயே!

யாழ்ப்பாணம், நவ. 2

அச்சுவேலி – வயாவிளான் வீதி விடுவிக்கப்பட்டுள்ளதாக ஒரு போலித் தோற்றப்பாடு ஏற்படுத்தப்படுகின்றது. உண்மையில் வீதியின் பெரும்பகுதி இன்னமும் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில்தான் உள்ளது என்று அந்தப் பகுதி பொதுமக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

15

இரணைமடு

## குடிதண்ணீர்த் திட்டத்தை செயற்படுத்தச் சிக்கல்!

வடக்கு ஆளுநர் தெரிவிப்பு

கிளிநொச்சி, நவ. 2

இரணைமடு நன்னீர்த் திட்டமானது யாழ்ப்பாண மாவட்டத்திற்கு நீரை கொண்டு வருவதற்காகவே திட்டமிடப்பட்டது. ஆனாலும் செயற்படுத்துவதில் காணப்படும் சிக்கல்கள் காரணமாகத் திட்டம் இதுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை – என்று வடமாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.


15

## ரயில் மோதி ஒருவர் பலி!

யாழ்., நவம்பர் 2

யாழ்ப்பாணம் – சுண்டுக்குளி பகுதியில் ரயில் மோதி ஒருவர் உயிரிழந்துள்ளார். அருளானந்தம் ஜேசுதாசன் (வயது – 58) என்ற

15




"தேர்தலுக்காகவாவது இப்பிடி ஏதும் நல்லது நடக்குமெண்டா நெடுக தேர்தலையே வைச்சுக்கொண்டிருக்கலாம் போல"

வன்னித் தேர்தல் மாவட்டம்:

## 17 முறைப்பாடுகள்!

வவுனியா, நவ. 2

நாடாளுமன்றத் தேர்தலை முன்னிட்டு வன்னித் தேர்தல் மாவட்டத்தில் இதுவரை 17 தேர்தல் முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன என்று வவுனியா மாவட்டச் செயலரும், வன்னித் தொகுதி தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலருமான பி.ஏ.சரத்சந்திர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

15

## வடமராட்சி இரட்டைக் கொலை; கைதான மூவருக்கும் மறியல்!

யாழ்ப்பாணம், நவ. 2

வடமராட்சி – பருத்தித்துறைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கற்கோவளம் பகுதியில் இடம்பெற்ற இரட்டைக் கொலையுடன் தொடர்புடைய மூன்று சந்தேகநபர்களையும் விளக்கமறியலில் வைக்குமாறு, பருத்தித்துறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கற்கோவளம் ஜே/406 கிராமசேவகர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இந்தப் படுகொலைகள் இடம்பெற்றன. மாணிக்கம் சுப்பிரமணியம் (வயது-53) என்ற சலவைத் தொழிலாளியும் அவரது மனை

15



## மஹிந்தவின் பாதுகாப்பு குறைக்கப்படவில்லை!

ஜனாதிபதி ஊடகப்பிரிவு அறிக்கை

கொழும்பு, நவ. 2

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் பாதுகாப்பு குறைக்கப்படவில்லை. இராணுவம், கடற்படை மற்றும் பொலிஸார் அவரின் பாதுகாப்புக்காகத் தொடர்ந்தும் கடமையில் உள்ளனர் என்று ஜனாதிபதி

15

கனகபுரம், கோப்பாய், முழங்காவில்

## மாவீரர் துயிலுமில்லங்களில் துப்புரவுப் பணிகள் ஆரம்பம்

கிளிநொச்சி, நவ. 2

கிளிநொச்சி – கனகபுரம், கோப்பாய், முழங்காவில் மாவீரர் துயிலுமில்லங்களில் நேற்றுத் துப்புரவுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

நவம்பர் மாதம் 27ஆம் திகதி மாவீரர் நாள் இடம்பெறவுள்ள நிலையில், தமிழர் தாயகத்தில் உள்ள மாவீரர் துயிலுமில்லங்கள் துப்புரவு செய்யப்படவுள்ளன. இதன் முதற்கட்டமாகவே இந்த மாவீரர் துயிலுமில்லங்களில் நேற்றுத் துப்புரவுப் பணிகள் இடம்பெற்றுள்ளன. (அ-ம-113-35)







மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் உறுதிமொழிகளை காற்றில் பறக்கவிட்ட அரசு

## சஜித் விளாசல்

**கொழும்பு, நவ. 2**
**பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்படும், 6 மாதங்களுக்கு ஒரு தடவை அரசாங்க ஊழியர்களின் சம்பளம் அதிகரிக்கப்படும், வற்வரி குறைக்கப்படும் என வாக்குறுதிகளை வழங்கி ஆட்சிபீடமேறிய அநுர அரசாங்கம் அதனை மீறி தற்போது செயற்படுகின்றது.**

இவ்வாறு எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ சுட்டிக்காட்டியுள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
ஜனாதிபதித் தேர்தலின்போது தேசிய மக்கள் சக்தியால் பல உறுதிமொழிகள் வழங்கப்பட்டிருந்தன. அவை நிறைவேற்றப்படும் என்ற நம்பிக்கையில் மக்களும் அநுர குமார திஸாநாயக்கவுக்கு வாக்களித்திருந்தனர். 6 மாதங்களுக்கு ஒரு தடவை அரசாங்க ஊழியர்களின் சம்பளம் அதிகரிக்கப்படும் என்ற உறுதிமொழி வழங்கப்பட்டிருந்தது. ஆனால் தற்போது மாறுபட்ட கதையைக் கூறுகின்றனர். பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்படும் எனவும் உறுதியளித்தனர். தற்போது அவ்வாறு முடியாது எனக் கூறுகின்றனர். வற் வரி குறைக்கப்படும் என்றார்கள். ஐ.எம்.எப். க்கு பயம் இல்லை எனவும் சூளுரைத்தார்கள். நாணய நிதியம் என்ன சொன்னாலும் வரி குறைக்கப்படும் எனக் குறிப்பிட்டிருந்தனர். ஆனால் இன்று நாணயநிதியத்திடம் மண்டியிட்டுள்ளனர் - என்றார். (ச-44)

# தமிழரசு தூண்போலுள்ளது 'நிழல்' கட்சிகள் எதற்கு?

## எம்.ஏ. சுமந்திரன் கேள்வி



கொழும்பு, நவ. 2
சமஷ்டியே தீர்வு எனக் கூறி வந்த தமிழரசுக் கட்சியான அசல் நாங்கள் இருக்கும் போது நிழல்களுக்கு மக்கள் வாக்களிக்க வேண்டிய தேவையில்லை என்று யாழ். தேர்தல் மாவட்டத்தில் தமிழரசுக் கட்சி சார்பில் போட்டியிடும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரான ஜனாதிபதி சட்டத்தரணி எம். ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.
யாழ். ஊடக அமையத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
தமிழ் மக்கள் வாழ்க்கையில் அரசியலில் 75 வருடங்களுக்கு மேலாக மாற்றத்தைத் தேடுகிறார்கள். அதற்காக பல வழிகளில் போராடி , பல உயிர்களை இழந்துள்ளார்கள்.
எங்களுடைய மக்கள் 75 வருட காலமாக நியாயமான அரசியல் மாற்றத்தை எதிர்பார்த்து காத்திருக்கின்றனர். தமிழ் மக்கள் விரும்பிய இந்த அரசியல் மாற்றத்துக்கு தெற்கு மக்கள் பங்கு தாரர்களாக வரவில்லை.
தற்போது மாற்றம் எனக் கூறி ஆட்சிபீடம் ஏறியுள்ள தேசிய மக்கள் சக்தியினரின்,தேர்தல் கால வாக்குறுதிகள் ஒன்றன் பின் ஒன்றாக சறுக்கத் தொடங்கிவிட்டன.
வடக்கு - கிழக்கு மக்கள் 75 வருட காலமாக ஒரே நிலைப்பாட்டில் தான் உள்ளனர். அதிகாரங்கள் சரியாக பகிரப்பட்டு சமஷ்டிக் கட்டமைப்பாக அது மாற வேண்டும். அந்த நிலைப்பாட்டை நாங்கள் முன்கொண்டு செல்ல நாடாளுமன்றுக்கு மிகப் பெரும் பலத்துடன் செல்லவேண்டும். எனவே நாம் முன்வைத்த சமஷ்டித் தீர்வையே அனைத்து தமிழ்க் கட்சிகளும் இன்றைக்கு ஏற்றுக்கொண்டுள்ளனர். எனவே அசல் நாங்கள் இருக்கும்போது நிழலுக்கு வாக்களிக்க வேண்டிய தேவையில்லை - என்றார். (ச)

# விட்டுக்கொடுப்பின்மையால் பிரிவினை

## தலதா சுட்டிக்காட்டு

கொழும்பு, நவ. 2
ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பதவியை சஜித் பிரேமதாஸ கோருவதாலேயே இரு தரப்பு இணைப்பு என்பது சாத்தியப்படாமல் உள்ளது என்று முன்னாள் அமைச்சர் தலதா அத்துக்கோரள தெரிவித்துள்ளார்.
ரணில் விக்கிரமசிங்க மற்றும் சஜித் பிரேமதாஸ ஆகியோர் இணையவேண்டும் என்றே நாம் ஆரம்பம் முதலே வலியுறுத்தி வருகிறோம்.
இதற்குரிய விட்டுக்கொடுப்புகளை ரணில் விக்கிரமசிங்க செய்திருந்தார். அவர் தேர்தலில்கூட போட்டியிடவில்லை. எனினும், சஜித் பிரேமதாஸவே இணைவுக்கு தடையாக உள்ளார். அவர் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப்பதவியைக் கோருகின்றார். தேசிய மக்கள் சக்தியினர் தற்போது எதிரணியில் இல்லை, அவர்கள் ஆளுங்கட்சியில் உள்ளனர். எனவே, கடந்தகாலங்களில் வழங்கிய உறுதிமொழிகளை நிறைவேற்ற வேண்டும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ச-44)

# சுங்க விசாரணைகள் நீண்டகாலமாக கிடப்பில்

கொழும்பு, நவ.2
இலங்கை சுங்கத்தின் பல்வேறு திணைக்களங்களினால் மேற்கொள்ளப்பட்ட 8 ஆயிரத்து 450 சுங்க விசாரணைகள் பல வருடங்களாக தீர்க்கப்படாமல் உள்ளதாக தேசிய கணக்காய்வு அலுவலகம் தெரிவித்துள்ளது.
இவற்றில் 3 ஆயிரத்து 80 விசாரணைகள் ஐந்தாண்டுகளுக்கு மேலாக தீர்க்கப்படாமலுள்ளன.
4 ஆயிரத்து 348 விசாரணைகள் இரண்டு முதல் நான்கு ஆண்டுகளாகவும், ஆயிரத்து 22 விசாரணைகள் ஒரு வருடமாகவும் தீர்க்கப்படாமல் உள்ளதாக தேசிய கணக்காய்வு அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# லொஹானுக்கு விளக்கமறியல்

கொழும்பு, நவ. 2
கைதுசெய்யப்பட்ட முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தே, எதிர்வரும் 7 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். நுகேகொடை பதில் நீதிவானிடம் முன்னிலைப்படுத்தியபோது இந்த விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.
நுகேகொடை மிரிஹானையில் உள்ள அவரது மனைவி வீட்டில் இலக்கத் தகடுகள் இல்லாத கார் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டமை தொடர்பில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தே நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)



# பொய்த் தகவல்கள் பரப்பப்படுகின்றன

## அநுர ஆதங்கம்

கொழும்பு, நவ.2
புதிய அரசாங்கத்துக்கு பலமான அதிகாரத்தை வழங்காமல் ஸ்திரமற்ற தன்மையை ஏற்படுத்தும் நோக்கில் சில அரசியல்வாதிகளும் ஊடக நிறுவனங்களும் நாட்டில் அராஜகத்தை ஏற்படுத்துவதற்காக பொய்யான செய்திகளைப் பரப்பி வருவதாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.
அமைச்சரவை முடிவு எடுக்கப்பட்டாலும் அல்லது நிதி ஒதுக்கப்பட்டிருந்தாலும், முதல் வரவு - செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிப்போம்.
எங்களிடம் ஜனாதிபதிப் பதவியும் சிறிய அமைச்சரவையும் மட்டுமே உள்ளது. நாடாளுமன்றம் கலைக்கப்பட்டுள்ளது. நாங்கள் ஆட்சியை கைப்பற்றி 3 மாதங்கள் கடந்துள்ள நிலையில், சில ஊடகங்களும், சில அரசியல்வாதிகளும் பலமான அதிகாரத்தை வழங்காமல் ஸ்திரமின்மையை ஏற்படுத்த முயற்சிக்கின்றனர். நாட்டில் ஜனநாயகத்தை உறுதிப்படுத்துவதற்கு ஊடக நிறுவனங்கள் முக்கியமானவை. அவை பொறுப்பான அறிக்கையிடல் நடைமுறையைப் பின்பற்ற வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச)

# போர்க்குற்றங்களுக்கு சர்வதேச நீதியே அவசியம்

## ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி தேர்தல் விஞ்ஞாபனத்தில் வலியுறுத்து

கொழும்பு, நவ. 2
ஈழத்தமிழர்களுக்கு எதிராக சிறீலங்கா அரசு நடத்திய இன அழிப்பு, போர்க்குற்றங்கள் பன்னாட்டு நீதித்துறைக் கட்டமைப்புக்கூடாக முழுமையாகவும் முறையாகவும் விசாரிக்கப்பட்டுப் பரிகார நீதி வழங்கப்படவேண்டும்.
-இவ்வாறு ஜனநாயகத் தமிழ்த்தேசியக் கூட்டணியின் நாடாளுமன்றத் தேர்தல் விஞ்ஞாபனத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.
ஈழத்தமிழர்களுக்கு எதிராக சிறீலங்கா அரசு நடத்திய இன அழிப்பு, போர்க்குற்றங்கள், மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்கள் யாவும் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பன்னாட்டு நீதித்துறைக் கட்டமைப்புக் கூடாக முழுமையாகவும் முறையாகவும் விசாரிக்கப்பட்டுப் பரிகார நீதி வழங்கப்படவேண்டும். இன அழிப்புச் செயற்பாடுகளின் மீள் நிகழாமையை உறுதி செய்யவேண்டும்.
இதுவரையிலுமான ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் தீர்மானங்களின் தொகுக்கப்பட்ட அனுபவமாக ஐ.நா. பொதுச்செயலரின் பொறுப்புக்கூறலை ஐ.நா. பொதுச்சபையிடம் பாரப்படுத்துவதன் மூலம் இனஅழிப்புக்கு எதிரான பன்னாட்டு விசாரணைகளை அனைத்துலகக் குற்றவியல் நீதிமன்றத்திடம் பாரப்படுத்தவேண்டும். எமது கூட்டணியில், நாம் தமிழ் மக்களை ஓரணியாகத் திரட்டுவோம். இனப் பிரச்சினைக்கான தீர்வை நோக்கிய தமிழ் மக்களின் உறுதியான கோரிக்கையை சர்வதேச சமூகத்துக்கும் தென்னிலங்கைக்கும் வெளிப்படுத்துவோம் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது. (ச-66)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org







# மாவீரர் துயிலுமில்லத்தில் துப்புரவுப் பணிகள்

யாழ்ப்பாணம், நவ.2

எதிர்வரும் 27ஆம் திகதி மாவீரர் நினைவேந்தல் வாரம் ஆரம்பமாகவுள்ள நிலையில் முழங்காவில் மாவீரர் துயிலும் இல்லத்தில் துப்புரவுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. சுயேச்சைக்குழு 14 இல் போட்டியிடும் சனநாயக தமிழரசுக் கூட்டமைப்பின் முதன்மை வேட்பாளர் கே.வி.தவராசா, சக வேட்பாளர்கள் மற்றும் பொதுமக்கள் இணைந்து இந்தத் துப்புரவுப் பணியில் ஈடுபட்டனர். (ச)




# ரயில் நிலைய அதிபர்கள் மீண்டும் பணிப்புறக்கணிப்பு

கொழும்பு, நவ. 2

ரயில் நிலைய அதிபர்கள் சங்கத்தினால் முன்னெடுக்கப்பட்ட பணிப்பகிஷ்கரிப்பு தற்காலிகமாக கைவிடப்பட்டது. தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு இந்தப்பணிப்பகிஷ்கரிப்பு கைவிடப்பட்டுள்ளது.


பதவி உயர்வு மற்றும் ஆட்சேர்ப்பு உள்ளிட்ட சில பிரச்சினைகளை அடிப்படையாக வைத்து கடந்த புதன்கிழமை இரவுவரை தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

தமது கோரிக்கைக்கு அரசாங்கம் செவிசாய்க்காததால் மீண்டும் நேற்று முதல் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளதாக ரயில் நிலைய அதிபர்கள் சங்கத்தின் தலைவர் சுமேத சோமரத்ன தெரிவித்தார். (ச)



விடியலின் திசை

தபால்பெட்டி
சின்னத்திற்கு வாக்களிப்பீர்



வடக்குப் பிரதேச மக்களின் பிரச்சனைகள் மற்றும் கோரிக்கைகளுக்கு நிரந்தர தீர்வுகளை முன்மொழிவதற்கான வழிகாட்டியாக 'விடியலின் திசை' செயல்படும்

மக்கள், தளத்தில் தங்கள் வாக்குகளைப் பதிவு செய்வதன் மூலம், உடனடி தீர்வு தேவைப்படும் முக்கிய பிரச்சனைகளை முன்னுரிமைப்படுத்தலாம்

தரவரிசையில் முன்னிலை வகிக்கும் முக்கிய பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை நான் நேரடியாக மேற்கொள்ளுவேன்

நான் மட்டுமன்றி, வடக்கு பகுதியின் மற்ற பாராளுமன்ற உறுப்பினர்களும், அரச சேவையாளர்களும், தளத்தில் முன்வைக்கப்படும் பிரச்சனைகளுக்குத் தீர்வுகளை வழங்க இணைந்து செயற்படவேண்டும்

தனித்தல்ல, அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவதன் மூலம் மட்டுமே நமக்கான நிரந்தர தீர்வுகளை அடையமுடியும். இதற்கான தொடக்க முயற்சியாக 'விடியலின் திசை' அமையும்

ප්‍රජාතන්ත්‍රවාදී ජාතික සන්ධානය
ஜனநாயக தேசிய கூட்டணி
Democratic National Alliance

X 1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# கந்தசஷ்டி பூசைகள்

யாழ்ப்பாணம், நவ. 2
கந்தசஷ்டியை முன்னிட்டு கொழும்புத்துறை மேற்கு பழனி யாண்டவர் கோவிலில் சிறப்புப் பூசைகள் இன்று சனிக்கிழமை தொடக்கம் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெறும். (ச-45-17)



# துயிலுமில்லங்களில் துப்புரவுப் பணிகள்!

யாழ்ப்பாணம், நவ. 2
எதிர்வரும் 27ஆம் திகதி மாவீரர் நினைவேந்தல் வாரம் ஆரம்பமாகவுள்ள நிலையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியால் மாவீரர் துயிலுமில்லங்களில் துப்புரவுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.
நேற்று வெள்ளிக்கிழமை கோப்பாய் துயிலும் இல்லம் முன்பாக துப்புரவுப்பணி இடம்பெற்றது.
துப்புரவுப் பணியில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன், கட்சியின் ஆதரவாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-27,66)



# மரக்கறி விலை கிடுகிடு உயர்வு

யாழ்ப்பாணம், நவ. 2
கந்தசஷ்டி விரதம் தற்போது ஆரம்பமாகியுள்ளமையால் மரக்கறி வகைகளுக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதோடு, சந்தையில் அவற்றின் விலையும் சடுதியாக அதிகரித்துள்ளன.
திருநெல்வேலி சந்தையில் கத்தரிக்காய் கிலோ 400 ரூபாவும், பாவற்காய் கிலோ 600 ரூபாவும், பயிற்றங்காய் கிலோ 400 ரூபாவும், தக்காளிப்பழம் கிலோ 360 ரூபாவும், மரவள்ளி கிலோ 300 ரூபாவும், கரட் கிலோ 200 ரூபாவும், பச்சை மிளகாய் கிலோ 500 ரூபாவும், கீரை ஒரு பிடி 150 ரூபாவாகவும் நேற்று விற்பனை செய்யப்பட்டன. (ச-45-17)

## சிறப்பு வழிபாடுகள்

யாழ்ப்பாணம், நவ. 2
கேதார கௌரி விரதத்தின் நிறைவை முன்னிட்டு சிறப்புப் பூசை வழிபாடுகள் யாழ். குடாநாட்டிலுள்ள அம்மன் ஆலயங்களில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றன. (ச-45-17)



# யாழ்.பொலிஸாரால் பூசை வழிபாடுகள்

யாழ்ப்பாணம், நவ. 2
தீபாவளி தினத்தை முன்னிட்டு நேற்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் முனியப்பர் கோயிலில் சிறப்புப் பூஜை வழிபாடுகள் முன்னெடுக்கப்பட்டன.
யாழ்ப்பாண சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் லூசன் சூரியபண்டாரவின் ஏற்பாட்டின் கீழ் இந்தப் பூசை வழிபாடுகள் முன்னெடுக்கப்பட்டன. பூசை வழிபாடுகளில் பொலிஸ் அதிகாரிகள், பொலிஸ் உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-27)



வலிகாமம் கிழக்குப் பிரதேசசபைக்குட்பட்ட உரும்பிராய் பொது நூலகத்தால் வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளின் பரிசளிப்பு விழா உரும்பிராய் கற்பக விநாயகர் மணிமண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட உதவி நூலகர் இரத்தினகுமார் குபேசன் கலந்துகொண்டார். (ச-45)

# பஜனை நிகழ்வு

யாழ்ப்பாணம், நவ. 2
சிவகுரு ஆதீனத்தின் ஏற்பாட்டில் கந்தசஷ்டி உற்சவகாலப் பஜனை நிகழ்வுகள் மாலை வேளையில் நாளை சனிக்கிழமை தொடக்கம் சூரசம்ஹார நாளான எதிர்வரும் 7 ஆம் திகதி வியாழக்கிழமை வரை நடைபெறவுள்ளன.
நிகழ்வில் மாணவர்களையும், முருகப்பெருமான் அடியவர்களையும் பங்குபற்றுமாறு சிவகுரு ஆதீன முதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகள் கேட்டுள்ளார். (ச-45-66)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** மகிழ்ச்சி தரும் நாளாக இருக்கும். மனவருத்தம் நீங்கி அந்நியோன்யம் அதிகரிக்கும். வெளியூர்ப் பயணங்களைத் தவிர்ப்பது நல்லது. செலவுகள் ஏற்படக்கூடும். துணிச்சலுடன் முடிவு எடுப்பீர்கள். பணிநெருக்கடி குறையும்.

**இடபம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. சகோதர வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உறவினர்கள் வருகை மகிழ்ச்சி தரும். திடீர் செலவுகள் ஏற்படக்கூடும்.

**மிதுனம்:** உற்சாகமான நாளாக இருக்கும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். குடும்பத்தில் பெரியவர்களின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும். சக ஊழியர்களின் விடயங்களில் தலையிடவேண்டாம். இலாபம் அதிகரிக்கும்.

**கடகம்:** மனதில் குழப்பம் ஏற்பட்டு நீங்கும். பிரச்சினைகள் ஏற்படக்கூடும். வாழ்க்கைத் துணையுடன் அனுசரித்துச் செல்லவும். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். திடீர் செலவுகளால் மனதில் சஞ்சலம் ஏற்படும்.

**சிம்மம்:** புதிய முயற்சி சாதகமாக முடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். உடல் நலனில் கவனம் தேவை. வெளியூர்ப் பயணங்களைத் தவிர்க்கவும். சலுகைகள் கிடைக்கும். வியாபாரத்தில் விற்பனையும் இலாபமும் அதிகரிக்கும்.

**கன்னி:** அதிர்ஷ்டம் தரும் நாளாக இருக்கும். பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. சலுகைகள் கிடைப்பது உற்சாகமும் மகிழ்ச்சியும் தரும். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும்.

**துலாம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்கவேண்டிய நாள். புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. அலைச்சல் ஏற்படக்கூடும். பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. அன்பும் ஆதரவும் மகிழ்ச்சி தரும்.

**தனுசு:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். அலுவலகத்தில் உற்சாகமான சூழ்நிலையே காணப்படும். சலுகை கிடைக்கும்.

**மகரம்:** அதிர்ஷ்டகரமான நாளாக இருக்கும். ஆதாயம் ஏற்படக்கூடும். சிறுசிறு சலசலப்புகள் ஏற்படக்கூடும். எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. எதிர்பார்த்த சலுகை இன்று கிடைப்பதற்கு வாய்ப்பு உள்ளது.

**கும்பம்:** நீண்டநாள்களாக எதிர்பார்த்து ஏமாந்த பணம் கைக்கு வந்து மகிழ்ச்சி தரும். குடும்பப் பொறுப்புகளை மகிழ்ச்சியுடன் நிறைவேற்றுவீர்கள். அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரித்தாலும் சக ஊழியர்களின் உதவியுடன் முடித்துவிடுவீர்கள்.

**மீனம்:** மனதில் சஞ்சலம் ஏற்பட்டு நீங்கும். தாயின் தேவையை நிறைவேற்ற சிறிது அலையவேண்டியிருக்கும். சிலருக்கு பயணங்களால் அனுகூலம் உண்டாகும். உடல் நலனில் கவனம் தேவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## ஊஞ்சல் சின்னத்தின் விஞ்ஞாபனம் வெளியீடு

கொழும்பு, நவ. 2

சுயேச்சைக் குழு 2, ஊஞ்சல் சின்னத்தில் போட்டியிடும் ஈ.எஸ்.பி. நாகரத்தினம் கமலரூபனின் ஐந்து அம்சங்களை உள்ளடக்கிய தேர்தல் விஞ்ஞாபனம் தீபாவளி தினமான நேற்று முன்தினம் வெளியிடப்பட்டது.

யாழ்பாணம் மற்றும் கிளிநொச்சி தேர்தல் மாவட்டத்தில் உள்ள ஐந்து இடங்களான காரைநகர், வாரிவளவு கற்பக விநாயகர் ஆலயம், யாழ்ப்பாணம் நல்லூர்க் கந்தசுவாமி கோவில், வடமராட்சி பொற்பதி புனித இராஜப்பர் ஆலயம், தென்மராட்சி சாவகச்சேரி நகர பேருந்து நிலையம் மற்றும் கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயம் முன்பாக இந்த விஞ்ஞாபனத்தை அவர் வெளியிட்டு வைத்தார். (ச)


# பாராளுமன்றத் தேர்தல் - 2024

யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்டம்

**அன்புக்குரிய மக்களே!**


'இரு தேசங்கள் ஒரு நாடு' என்ற இலக்கினையடைய, தமிழ்த் தேசக் கொள்கை வழி நின்று நேர்மையாக செயற்பட்டு வருகின்றோம். இலஞ்சம், ஊழலற்ற - செயல் திறன்வாய்ந்த - சொல்லுக்கும் செயலுக்கும் ஒத்திசைவுள்ள இயக்கமாகவே செயற்படுகின்றோம். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சலுகைகளுக்கு விலைபோகாத, நேர்மையான அரசியல் பயணத்தையே முன்னெடுத்துவருகின்றோம்.

எமது அணியின் கொள்கை நிலைப்பாட்டைப் பலப்படுத்த, தமிழ் இனம் தனது வரலாற்றுக் கடமையை ஆற்றும்வகையில், உங்கள் தார்மீக ஆதரவை அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸின் **'சைக்கிள்'** சின்னத்துக்கு வழங்குமாறு அன்புரிமையுடன் வேண்டிநிற்கின்றோம்.

**தமிழ்த் தேசமாய் பேரெழுச்சி கொள்வோம்!**




**'இரு தேசங்கள் ஒரு நாடு'**
இலக்கினை அடைய
**ஒற்றைத் தலைமையில் ஓரணியாவோம்!**



அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ்
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதுகாப்பு அதிகாரிகள் மஹிந்தவுக்கு குறைப்பு

## சுற்றறிக்கை வெளியானது



**கொழும்பு, நவ.2**

**முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் பாதுகாப்புக்காக நியமிக்கப்பட்டிருந்த பாதுகாப்பு அதிகாரிகளின் எண்ணிக்கை குறைக்கப்பட்டுள்ளது.**

பாதுகாப்பு உத்தியோகத்தர் நியமனக் குழுவினால் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம், பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரியவின் உத்தரவு மற்றும் பணிப்புரைக்கு அமைய சுற்றறிக்கை வெளியிடப்பட்டு இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் பாதுகாப்புக்காக 60 அதிகாரிகள், 2 ஜீப் வாகனங்கள், 2 மோட்டார் சைக்கிள்கள் மற்றும் ஒரு முச்சக்கரவண்டி என்பன வழங்கப்பட்டுள்ளன. இது தவிர மேலதிகமாக அதிகாரிகள் இருந்தால் அந்தப் பிரிவுக்குப் பொறுப்பான டி.ஐ.ஜி.யிடம் முறைப்பாடு அளிக்கவேண்டும் என்றும் வழங்கப்பட்ட வாகனங்களுக்கு அதிக எண்ணிக்கையிலான வாகனங்கள் இருந்தால் அவற்றை பொலிஸ் போக்குவரத்துப் பிரிவில் ஒப்படைக்கவேண்டும் என்றும் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# ஹெரோய்னுடன் தம்பதியர் கைது

கொழும்பு, நவ. 2

சுமார் 200 கோடி ரூபா பெறுமதியான ஹெரோய்ன் போதைப்பொருளுடன் கணவனும் மனைவியும் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்களின் வீட்டு முற்றத்தில் புதைக்கப்பட்டிருந்த மூன்று பிளாஸ்ரிக் கொள்கலன்களில் இருந்து 53 கிலோ 65 கிராம் ஹெரோய்ன் போதைப்பொருள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்கள் மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸ்போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (ச)

# அநுர ஒப்பந்தத்துடன் நாணயத்தாள்

யாழ்ப்பாணம், நவ.2

எதிர்காலத்தில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் கையொப்பத்துடன் கூடிய நாணயத்தாள்கள் வெளிவரலாம் என பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

பயன்படுத்தமுடியாத பழைய நாணயத்தாள்களுக்குப் பதிலாக புதிய நாணயத்தாள்களை மத்தியவங்கி அச்சிடுவதாகவும், இவ்வாறு அச்சிடப்படுபவை தற்போதைய ஜனாதிபதியின் கையொப்பத்துடன் வெளியிடப்படும் என்றும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார். அத்தோடு, இது ஒரு சாதாரண செயற்பாடு என்றும் பிரதமர் ஹரிணி சுட்டிக்காட்டியுள்ளார். (ச)

# அறுகம்குடா அபாயம் தீவிரவாதச் செயலல்ல!

## அரசாங்கம் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 2

அறுகம்குடாவில் தாக்குதலை மேற்கொள்வதற்குத் திட்டமிடப்பட்டமையின் பின்னணியில் தீவிரவாதமில்லை அது ஒரு திட்டமிடப்பட்ட குற்றச்செயல் என அரசாங்கம் அமெரிக்காவுக்குத் தெரிவித்துள்ளது. அமெரிக்கத் தூதரக அதிகாரிகளை சந்தித்தவேளை அரசாங்க அதிகாரிகள் இதனைத் தெரிவித்துள்ளனர். அறுகம்குடா குறித்து அமெரிக்கா விடுத்த பயண எச்சரிக்கை குறித்து கேள்வி எழுப்பியுள்ள இலங்கை அரசாங்கத் தரப்பினர் இந்த சதித்திட்டமிடலின் பின்னணியில் தீவிரவாதம் இல்லை என்பதால் இந்தப் பயண எச்சரிக்கை அவசியமா என கேள்வி எழுப்பியுள்ளனர். அசம்பாவிதங்கள் எவையும் இடம்பெறாததால் பயண எச்சரிக்கையை நீக்கவேண்டும் என்றும் இலங்கை அதிகாரிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ச-இ)



# இத்தாலித் தூதுவர் பிரதமருடன் சந்திப்பு

கொழும்பு, நவ. 2

இலங்கைக்கான இத்தாலியத் தூதுவர் டாமியானோ பிராங்கோவிக் கடந்த புதன்கிழமை பிரதமர் அலுவலகத்தில் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவை சந்தித்துக் கலந்துரையாடினார். கலந்துரையாடலில் இத்தாலிக்கும் இலங்கைக்கும் இடையிலான நீண்டகால இராஜதந்திர உறவுகள் மீள உறுதிப்படுத்தப்பட்டதுடன், இருதரப்பு ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான பிரதான விடயங்கள் கலந்துரையாடப்பட்டன. இத்தாலியில் வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் மற்றும் குறிப்பாகப் பயிற்றப்பட்ட புலம்பெயர் தொழிலாளர்களுக்கு வழங்க முடியுமான வாய்ப்புகள் குறித்து கலந்துரையாடப்பட்டன. (ச-இ)

# முப்படையினரின் ஊதியத்தை உயர்த்துக

கொழும்பு, நவ. 2

முப்படையினர் மற்றும் சிவில் பாதுகாப்புப் படையினரின் சம்பளங்கள் அதிகரிக்கப்படவேண்டுமென முன்னாள் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னக்கோன் கோரியுள்ளார். உணவுக் கொடுப்பனவை சம்பளத்துடன் சேர்க்குமாறு பல்வேறு சந்தர்ப்பங்களில் படையினர் கோரி வந்தனர்.


எனவே தற்போதைய அரசாங்கம் முப்படையினர் மற்றும் சிவில் பாதுகாப்புப் படையினர் ஆகியோரது கோரிக்கையை நிறைவேற்ற வேண்டுமெனவும் அவர் கோரியுள்ளார். (ச)




**சொந்தமா** எதையும் பகுத்தறிஞ்சு செய்யாமல், ஆரும் சொன்னவேலையளை மட்டும் அப்பிடியே செய்யிற ஆக்களை சொன்னதைச் செய்யும் சுப்பன் எண்டு எங்கட பழையாக்கள் சொல்லுவினம். இப்பிடி ஏவல் பேயள் மாதிரி சொன்னதை மட்டும் செய்துபோட்டு போறவையளால எதிர்பாராத சோலியளும் வரும், சிலவேளை கடும் சிரிப்பும் வரும்.

இப்ப எலக்சன் காலம். வாற பதினோராம் திகதி மட்டும் தான் அரசியல் கட்சியள் பிரசாரம் செய்யலாம். அதுக்குப் பிறகு ரண்டு நாளைக்கு அவையள் கையைக் கட்டிக் கொண்டுதான் இருக்கவேணும். அதால கைவசம் இருக்கிற கொஞ்சநாளில எப்பிடியாவது தங்கட சின்னத்தையும், விருப்பிலக்கத்தையும் சனங்களின்ர மனதில பதியவைச்சு, அதை வாக்கா மாத்தவேணும் எண்டு அரசியல்வாதியள் தலையால கிடங்கு கிண்டிக்கொண்டிருக்கினம். போஸ்டர் ஒட்டுறது, நோட்டீஸ் குடுக்கிறது, தங்கட கொள்கைகளை நோட்டீஸா அடிச்சு தபாலில அனுப்பிறது, பொக்கற் கலண்டர் அடிச்சுக் குடுக்கிறது, கூட்டங்கள் வைக்கிறது எண்டு பலதரப்பட்ட வழியளில பிரசாரம் செய்துகொண்டிருக்கினம். இதைவிட இன்னும் ஆழமா மக்களின்ர மனதில தங்கட சின்னமும், நம்பரும் பதியோணும் எண்டதுக்காக குச்சொழுங்கையில இருந்து கார்ப்பெற் றோட்டு வரைக்கும் எங்கையெல்லாம் தார் போட்ட பாதை கண்ணுக்கு எத்துப்படுகுதோ அங்கையெல்லாம் சின்னத்தையும், நம்பரையும் வெள்ளைப் பெயின்ரால கீறுற வேலையும் நடக்குது. எந்த றோட்டால நீங்கள் போனாலும் உங்களுக்கு முன்னால இப்பிடிச் சின்னங்களும், நம்பர்களும் றோட்டில படுத்துக்கிடக்கிறதைப் பாப்பீங்கள். றோட்டில சின்னத்தையும், நம்பரையும் பெயின்ரால கீறினால், அதைப் பொலிஸ்காரர் அழிக்கமாட்டினம். அதால தான் எல்லாக் கட்சிக்காரர்களும் றோட்டில பெயின்ரால தங்கட சின்னத்தை வரையிறதில குறியா இருக்கினம். நோட்டீஸ் ஒட்டினால் அதைக் கிழிக்கிறதும், கழிவொயில் ஊத்துறதும் தான் பொலிஸ்காரர் செய்யிற வேலை. இப்பிடி பெயின்ரால கீறினதை அழிக்கிறது கடும் கஷ்டம். அதை மறைக்கிறதெண்டால் திரும்ப அதுக்கு மேல பெயின்ற் அடிச்சாத்தான் மறையும். அதுக்கு நிறையக் காசு வேணுமெண்டதால இவ்வளவுநாளும் பொலிஸ்காரர் றோட்டில கீறிக்கிடக்கிற சின்னங்களைச் சீண்டுறேலை.

ஆனால் இந்தமுறை எங்கையோ இருந்து பொலிஸ்காரருக்கு பெயின்ற் கிடைச்சிட்டுது போல. கட்சிக்காரரை விடவும் வேகமாக றோட்டில இருந்த சின்னங்கள், நம்பர்களுக்கு மேல வெள்ளைப் பெயின்ரை அடிச்சு அதுகளைத் தெரியாமல் செய்துகொண்டு வருகினம். அதால கறுப்பா இருந்த றோட்டுகளில தேமல் வந்தமாதிரி பொட்டுப் பொட்டா வெள்ளைக்கலர் பரவத் தொடங்கியிருக்குது. இந்தவேலையில தான் தாங்கள் சொன்னதைச் செய்யிற சுப்பன்கள் எண்டு பொலிஸ்காரர் எண்பிச்சிருக்கினம். கைதடிப் பாலத்தில சைக்கிளில போய்வாறதுக்காக ரண்டு பக்க கரையிலையும் இடம் விட்டிருக்கு. அது சைக்கிள் பயணியளுக்கு எண்டு காட்டுறதுக்காக அதில சைக்கிள் அடையாளம் வெள்ளைக்கலரில இருந்தது. ஆனால் சைக்கிள் சின்னத்திலை முன்னணி போட்டி போடுறதால, அதுவும் எலக்சன் பிரசாரமாக்கும் எண்டு நினைச்சு அதுக்கு மேலையும் வெள்ளைப் பெயிண்ட் விளையாட்டைப் பொலிஸ்காரர் காட்டிட்டினம். இப்ப அந்தக் குறியீடு தெரியாமல் வெள்ளைப் பெயிண்ட் ஊத்தினமாதிரி அந்த இடம் இருக்கு. பொலிஸ்காரர் போறவேகத்தைப் பார்த்தால், சிலிண்டர் சின்னத்திலையும் சிலர் எலக்சன் கேக்கிறதால், இனிமேல் கடையளில இருக்கிற சிலிண்டர்களுக்கும் வெள்ளைப் பெயிண்ட் அடிச்சாலும் அடிப்பினம் போல. மூளையைக் கழட்டி வைச்சிட்டு, பெயிண்ட் அடிக்கிற பொலிஸூக்கு சின்னமென்ன, சிக்னலென்ன, எல்லாமே ஒண்டுதான்.



- பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்
பாராளுமன்ற தேர்தல் 2024

ஊஞ்சல் சின்னம்
X 4
சுயேச்சைக் குழு - 2




நேர்மையான வினைத்திறன்மிக்க அரசியலுக்கு!
இளைஞர்களின் வருகையை ஆதரிப்போம்!


அரசியல் மற்றும் பொருளாதார சிந்தனையுள்ள
மண்ணையும், மக்களையும், நேசிக்கும் ஆளுமைமிக்க இளைஞனே
மக்களின் எதிர்பார்ப்பு...

தந்தையாரின் சமூகப்பணிகள் சில....

சிறு வயது முதல் களத்தில் கமல்....


யா / தேசிய கல்வியியற் கல்லூரியால் "கல்விக்காருண்யன்" எனும் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டபோது...


சென் ஜோன்ஸ் கல்லூரியில்...



கொழும்பு இந்துக் கல்லூரியில்...


வடக்கின் சமர் அனுசரணையின் போது...



இந்துக்களின் சமர் அனுசரணையின் போது...


கொழும்பு பல்கலைக்கழக தமிழ்ச்சங்க முத்தமிழ் விழாவின் தலைமை உரையின் போது...


சிறுவர்களுக்கான கல்வி வழிகாட்டல்களின் போது...


தெல்லிப்பளை புற்றுநோய் வைத்தியசாலைக்கான காணி அன்பளிப்பு...


பாடசாலை கட்டுமானங்கள் தொடர்பான கள விஜயம்


தேர்தல் களத்தில் கமல்...

ஊஞ்சல் சின்னம்
சுயேச்சைக் குழு - 2
X 1 2 3 4 5 6 7 8 9


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

தோற்றம்
29 . 12 . 1937



மறைவு
27 . 10 . 2024

# சரவணை கந்தையா

(ஓய்வு பெற்ற வர்த்தகர்)

காரைநகர் விளானையை பிறப்பிடமாகவும் கொக்குவில் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சரவணை கந்தையா (ஓய்வு பெற்ற வர்த்தகர்) கடந்த 27.10.2024 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவனை - சிதேவிபிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் - பார்வதி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற நாகம்மாவின் அன்புக் கணவரும், தேவதாஸ் (சுவிஸ்), மோகனாம்பாள் (நோர்வே), சிவயோகேஸ்வரி (இலங்கை), சறோஜாதேவி (பிரான்ஸ்), முருகானந்ததாஸ் (பிரான்ஸ்), கிருஷ்ணதாஸ் (மாவீரன் நகுலன்), கஜனதாஸ் (நோர்வே) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், கனகரட்ணம், சறோஜினிதேவி, அருணகிரிநாதன், சிவரஞ்சிதன், தேவகுஞ்சரி, கவிதா ஆகியோரின் அன்பு மாமனாரும், அமலா, றிசோ,நீருஜன்,டிவாசன்,தேவதர்சன், தனுஜா, துளசிகா, சிவச்சந்துரு, சங்கவி , இராகவன், இரட்ச்சகன், அச்சதா, பத்மேஸ் ஆகியோரின் அன்பு பேரனும், காலஞ்சென்றவர்களான சின்னம்மா, விஸ்வலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான கந்தசாமி, சரஸ்வதி ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்றவர்களான கந்தசாமி .பராமசாமி, கார்த்திகேசு, நாகேஸ்வரி, வேலுப்பிள்ளை (இலங்கை) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.11.2024) ஞாயிற்றுக்கிழமை காலை 7:00 மணியளவில் அவரது இல்லத்தில் (தலையாழி வைரவர் கோயிலடி, கொக்குவில் கிழக்கில்) நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக காரைநகர் தில்லை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வருக்கும் அறியத்தருகிறோம்.

**தொடர்புகளுக்கு:**
**மகன் - 074 143 9134**
**மகள் - 077 055 4083**

**தகவல்:**
**குடும்பத்தினர்**
(cs.29206) N-1)

# ஆட்சிப்பீடமேறியதும் மாறுகின்றன காட்சிகள்

வேட்பாளர் சுரேன் குருசாமி தெரிவிப்பு

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
19 . 12 . 1932



மறைவு
02 . 11 . 2023

கடந்த 02.11.2023 அன்று சிவபதம் அடைந்த எங்கள் குடும்ப குலவிளக்கு

**அமரர் சபாபதி வன்னியசிங்கம்**
(நவாலியூர்)

ஓராண்டு காலம் ஓடி மறைந்தாலும்
உங்கள் முகம் மறக்க முடியவில்லை
உங்களோடு பேசிய அன்பு
வார்த்தைகள் கல கல சிரிப்பொலி
காதில் ஒலித்துக்கொண்டிருக்கின்றது
என்றும் உங்கள் நினைவோடு இருக்கின்றோம்.

**கடவைப்புலம்,**
**சுன்னாகம்.**

(cs.29204) (N-1)

**மனைவி,**
**மகன் குடும்பம்,**
**மகள் குடும்பம்.**

கொழும்பு, நவ. 2

மாற்றத்தை ஏற்படுத்தப் போகிறோம் என ஜே.வி.பி.யான தேசிய மக்கள் சக்தி ஜனாதிபதி வேட்பாளர் அநுர மக்களுக்கு வழங்கிய ஆணையை ஆட்சிப்பீடம் ஏறியதும் மறந்து விட்டார்கள். தமிழ் மக்கள் இந்தத் தருணத்தில் சிந்தித்து செயற்படவேண்டும்.

–இவ்வாறு ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளரான குருசாமி சுரேந்திரன் தெரிவித்தார்.


அவர் மேலும் தெரிவிக்கையில்;

மாற்றத்தை ஏற்படுத்தப் போகிறோம் எனக் கூறியவர்கள் மக்கள் எதிர்பார்த்த மாற்றத்தை ஏற்படுத்த முடியாமல் ஜே. வி.பி.யின் பழைய கோர முகங்களைக் காட்ட ஆரம்பித்து விட்டனர்.

தற்போதைய ஜனாதிபதியான அநுரகுமார திஸாநாயக்க பயங்கரவாத தடைச்சட்டத்தை ஒழிப்பேன், இலஞ்சம் ஊழல்களை ஒழிப்போம், கடந்த கால பாரிய ஊழல் மோசடியின மத்தியவங்கி பிணைமுறி மோசடிக்காரர்கள் ஆட்சிக்கு வந்ததும் 24 மணித்தியாலத்துக்குள் கைதுசெய்வோம் எனக் கூறியவர்கள் ஆட்சிக்கு வந்து ஒரு மாதம் கடந்த நிலையிலும் கைதுசெய்யவில்லை. தற்போது நாடாளுமன்றத் தேர்தல் இடம்பெறவுள்ள நிலையில் பிணைமுறி மோசடி, உயிர்த்த ஞாயிறு தாக்குதல்தொடர்பில்கண்துடைப்புவிசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்ற மாற்றம் அரசியல் நீதியான மாற்றமே தவிர தெற்கு அரசியலில் ஏற்பட்ட மாற்றமல்ல– என்றார். (ச–27)

# மரண அறிவித்தல்

## நடராஜா மகாதேவன்



**தோற்றம்**
**02.06.1941**

**மறைவு**
**01.11.2024**

யாழ். அத்தியடியைப் பிறப்பிடமாகவும், ஏழாலை மேற்கு, அவுஸ்திரேலியா சிட்னி ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட நடராஜா மகாதேவன் அவர்கள் நேற்று (01.11.2024) வெள்ளிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை நடராஜா - இராசம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற பொன்னம்பலம் சீனித்தம்பி - சிவபுரம் தம்பதிகளின் அன்பு மருமகனும், லோகேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், மகிந்தன், தர்ஷன், சுஜீர்த்தா ஆகியோரின் பாசமிகு தந்தையும், தக்ஷயாணி, சுகன்னியா, சதீஷ்கரன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், காலஞ்சென்றவர்களான புவனேஸ்வரி, இராஜலிங்கம், கமலேஸ்வரி மற்றும் பரமேஸ்வரி, சற்குணேஸ்வரி, நிர்மலேஸ்வரி, காலஞ்சென்ற பத்மநேசன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான முத்துக்குமாரு, கனகசபை, இராசதுரை, சுப்பிரமணியம், சபாரட்ணம், பொன்னம்பலம் மற்றும் மகேஸ்வரி, சுந்தரலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், மகிபனா, மகிஜனன், தர்னேஷ், தர்லேஷ், தர்னியா, சிராஷன், சிரோஷன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (04.11.2024) திங்கட்கிழமை Macquarie Park Cemetery and Crematorium Cnr Delhi Rd, Plassey Rd, Macquarie Park NSW 2113, Australia என்னும் இடத்தில் நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**

(CS.29211) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## முற்றான விடுவிப்பு எப்போது சாத்தியம்?

அச்சுவேலி - வயாவிளான் வீதியின் ஒரு பகுதி நேற்றுத் திறந்து விடப்பட்டிருக்கின்றது. 34 வருடங்களாக இராணுவத்தினரின் அதியுயர் பாதுகாப்பு வலயமாக அறிவிக்கப்பட்டிருந்த இந்த வீதியின் ஒரு பகுதி விடுவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, பொங்கலிட்டு அதைக் கொண்டாடித் தீர்த்திருக்கின்றனர் அந்தப் பகுதி மக்கள். அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு விடுவிப்பும்' ஒவ்வொரு முன்னேற்றமும் கொண்டாடப்பட வேண்டியதே. எனவே, இந்த விடுவிப்பு வரவேற்கப்பட வேண்டியது என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. ஆனால், மறுமுனையில் இதுவொரு கண்துடைப்பு என்பதையும் அழுத்தமாகப் பதிவுசெய்ய வேண்டிய அவசியம் இருக்கவே செய்கின்றது.

இரண்டு கிலோமீற்றருக்கும் மேற்பட்ட தூரமுடைய இந்த வீதியின் வெறும் ஒரு கிலோமீற்றர் பகுதியே தற்போது திறந்து விடப்பட்டிருக்கின்றது. மிகுதிப்பகுதி இன்னமும் இராணுவத்தின் கட்டுப்பாட்டின் கீழேயே தொடர்கின்றது. சுருங்கக் கூறினால், அந்த வீதியால் பயணிக்கும் மக்களுக்கு 10 நிமிடங்கள் மீதப்படுத்தப்படுகின்றன அவ்வளவே. அத்துடன், இந்த வீதி இதற்கு முன்னர் பயன்படுத்தப்படாத ஒன்றல்ல. யாழ்ப்பாணத்துக்கு மடுமாதா வந்தபோது அந்த வீதியால்தான் பயணப்பட்டிருக்கின்றார். ஆதலால், இதையொரு பெரும் விடுவிப்பு என்று கூறிக்கொள்ளமுடியாது. உண்மையில் அந்த வீதியை முற்றுமுழுதாக விடுவிக்கவேண்டும் என்பது தான் அந்தப் பகுதி மக்களின் வேணவா.

அத்துடன், தேர்தல் பரபரப்புகளுக்கு மத்தியில், நீண்டகாலக் கோரிக்கைகளின் பின்னர் இந்த வீதியின் ஒரு பகுதியே விடுவிக்கப்படுகின்றது என்றால், மிகுதிப் பகுதியை விடுவிக்க இன்னும் சில தசாப்தங்கள் காத்திருக்கவேண்டி ஏற்படுமோ? என்ற அச்சமும் தற்போது மேலிடுகின்றது. எனவே, முழுமையான விடுவிப்புக்கு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க வழிவகைகளை ஏற்படுத்தவேண்டும். ஜனாதிபதி மாளிகைக்கு அருகாக இருந்த வீதிகளையே பாதுகாப்புக் காரணங்களைக் கூறி மறித்து வைத்திருக்காமல் திறந்துவிடுமாறு உத்தரவிட்ட அவர், அச்சுவேலி - வயாவிளான் வீதியின் முழுமையான விடுவிப்புக்கு அனுக்கிரகம் பண்ணுவதென்பது ஒன்றும் அவ்வளவு கடினமான காரியமல்ல. ஆதலால் ஒரு முற்றான விடுவிப்பை தமிழர்கள் அவரிடம் இருந்து எதிர்பார்க்கின்றனர்.

இதேவேளை, மைத்திரி - ரணில் கூட்டாட்சி அரசாங்கத்தின்போது, அந்த அரசாங்கத்துக்கு முட்டுக்கொடுத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினராலோ, அல்லது தேசியக் கட்சிகளின் அரசாங்கங்களுக்கு முட்டுக்கொடுத்த தமிழ்க் கட்சிகளாலோ அச்சுவேலி - வயாவிளான் வீதி விடுவிப்பில் ஓர் அங்குலத்தையேனும் நகர்த்த முடியவில்லை. அப்படியிருக்கையில், பாதித் தூரத்தையேனும் எந்த ஆர்ப்பாட்டமுமின்றி விடுவித்தமையைப் பாராட்டத்தான் வேண்டும். அத்துடன், மேடைகளோ கூடாரங் களோ இல்லாமல் நின்றதும் தெரியாமல் நடப்பதும் தெரியாமல்தான் இந்த விடுவிப்பை அநுர அரசாங்கம் மேற்கொண்டிருக்கின்றது. வெற்று ஆரவாரங்கள் நேற்று இருக்கவேயில்லை. இதற்காக வேனும் ஆளும் தரப்பினரை எத்தனை பாராட்டினாலும் அது தகும்தான்.



# சீனாவின் ஆதரவு நாட்டுக்குத் தேவை

அரசாங்கம் தெரிவிப்பு

**கொழும்பு, நவ. 2**

**கடன் மறுசீரமைப்புக்கான அத்தியாயம் விரைவில் முழுமைபெறும் என்று இலங்கை நம்பிக்கை கொண்டுள்ளது. அதற்கமைய சீனாவுடன் உயர்தர, முன்னுரிமை திட்டங்களுக்கு புதிய நிதியுதவி உட்பட வலுவான நிதி உறவை மீண்டும் தொடங்கமுடியும் என்று திறைசேரியின் செயலாளர் மஹிந்த சிறிவர்த்தன தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,
இலங்கைக்கான சீனாவின் ஆதரவு, நாட்டின் அபிவிருத்திக்கு குறிப்பாக உட்கட்டமைப்பு மற்றும் பொருளாதார உதவித் துறையில் பங்காற்றியுள்ளது என்பதை நாம் மறந்துவிடமுடியாது. பல ஆண்டுகளாக, துறைமுகங்கள் உட்பட பல்வேறு திட்டங்களில் சீனா பில்லியன் டொலரை முதலீடு செய்துள்ளது.
குறிப்பாக நெருக்கடியான காலங்களில் இலங்கையின் பொருளாதார சவால்களை எதிர்கொள்ள சீனா நிதி உதவி மற்றும் கடன்களை வழங்கியுள்ளது. ஒட்டு மொத்தமாக, சீனாவின் தற்போதைய ஆதரவு பொருளாதார வளர்ச்சி மற்றும் நவீனமயமாக்கலுக்கான இலங்கையின் அபிலாஷைகளில் பங்கு வகிக்கிறது.
கடன் மறுசீரமைப்புக்கான அத்தியாயம் விரைவில் முழுமைபெறும் என்று இலங்கை நம்பிக்கை கொண்டுள்ளது. மேலும் சீனாவுடன் உயர்தர முன்னுரிமைத் திட்டங்களுக்கு புதிய நிதியுதவி உட்பட வலுவான நிதி உறவை மீண்டும் தொடங்க முடியும் என்ற எதிர்பார்ப்பும் உள்ளது - என்றார். (ச-இ)

## கண்காணிப்பாளர் நாட்டுக்கு வருகை

கொழும்பு, நவ. 2
நாடாளுமன்றத் தேர்தலை அவதானிப்பதற்காக வெளிநாட்டு கண்காணிப்பாளர்கள் நாட்டுக்கு வந்துள்ளனர்.
ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்பாளர்கள் கண்காணிப்பு நடவடிக்கைகளை ஏற்கனவே ஆரம்பித்துள்ளனர்.
மேலும், தபால்மூல வாக்களிப்பைக் கண்காணிக்க 1000 பார்வையாளர்களை ஈடுபடுத்த பவ்ரல் அமைப்பு நடவடிக்கை எடுத்துள்ளது என்றும் பவ்ரல் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார். (ச-இ)

## தேர்தல் முறைப்பாடு 1,259

கொழும்பு, நவ. 2
பொதுத்தேர்தல் தொடர்பில் இதுவரை 1,259 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகத் தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.
அதன்படி தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்துக்கு 342 முறைப்பாடுகளும், மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு 873 முறைப்பாடுகளும்கிடைக்கப்பெற்றுள்ளன. (ச-இ)

## குளவி கொட்டி பெண் பலி!

கொழும்பு, நவ. 2
கலென்பிடுனுவெவ உடுல்தெனிய பிரதேசத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரிகள் இருவர் மீது குளவி கொட்டியதில் ஒருவர் உயிரிழந்தார். உயிரிழந்தவர் 61 வயதுடைய பெண் என பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

## லொஹானிடமிருந்து மற்றொரு வாகனம் மீட்பு

கொழும்பு, நவ. 2
முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த பயன்படுத்தியதாகக் கூறப்படும் போலி இலக்கத் தகடுகள் பொருத்தப்பட்ட மற்றுமொரு வெள்ளை நிற ஜீப் வண்டியை, தெல்தெனிய பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். தெல்தெனிய பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பிரகாரம் ஆளில்லா வீடொன்றிலிருந்து இந்த வாகனம் மீட்கப்பட்டுள்ளது. (ச-இ)

## நாளை

03.11.2024
ஞாயிற்றுக்கிழமை - ஐப்பசி - 17
சுபநேரம் : 09.04 - 10.34
ராகுகாலம் : 04.34 - 06.04


## நாளொரு நல்வார்த்தை

**நீண்ட காலத்தின் முன்பு ஒருவர் மரம் ஒன்றினை நாட்டியதன் பயனாகவே இன்று இன்னொருவர் அம்மரத்தின் நிழலில் அமர்ந்துள்ளார்.**

- வாரன் ப வெற்-

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# புகலிடக் கோரிக்கையாளர்களை இனி பிரிட்டனுக்குள் அனுமதிக்கத் திட்டம்!



லண்டன், நவ. 2
பிரிட்டனின் கடற்பகுதிகளில், மிதக்கும் படகுகளில் தங்கவைக்கப்பட்டுள்ள புகலிடக் கோரிக்கையாளர்களை நாட்டுக்குள் அனுமதிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பிரிட்டனுக்குள் புகலிடம் கோருபவர்களை, நாட்டுக்குள் அனுமதிக்காமல் பிரமாண்டமான கப்பல்களில் தங்கவைப்பதை புகலிடத் தடுப்புக் கொள்கையின் கீழான பிரதான திட்டமாக, முன்னைய கன்சர்வேடிவ் அரசாங்கம் அறிவித்திருந்தது.

இந்தத் திட்டத்தின் கீழ், நூற்றுக் கணக்கான புகலிடக் கோரிக்கையாளர்கள் கப்பல்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். அவ்வாறு தடுத்து வைக்கப்பட்டவர்களை, பிரிட்டனுக்குள் அனுமதித்து வீடுகளில் தங்க வைக்க தற்போதை தொழிலாளர் கட்சி அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அரசாங்கத்தின் இந்த முடிவுக்கு பிரிட்டனில் உள்ள தீவிர வலதுசாரிகள் கடும் எதிர்ப்பைத் தெரிவித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். பிரிட்டனின் தொழில் வாய்ப்புக்களையும், வீடுகளையும், குடியிருப்புக்களையும் குடியேற்றவாசிகள் அபகரிப்பதை அனுமதிக்க முடியாது என்று போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

(ம)

## நல்லூர்க் கந்தன் கந்தசஷ்டி விரத உற்சவம் இன்று

யாழ்ப்பாணம், நவ. 2
வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தின் கந்தசஷ்டி விரத உற்சவம் இன்று சனிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து ஆறு தினங்கள் காலை, மாலை உற்சவங்களாக இடம்பெறவுள்ளது.

தினமும் காலை 9 மணிக்கு சிவலிங்க பூசையும், முற்பகல் 10 மணிக்கு காலைச் சந்திப் பூசையும், முற்பகல் 10.15 மணிக்கு வசந்தமண்டபப் பூசையும் நடைபெறவுள்ள அதே வேளை, தினமும் மாலை 3.45 மணிக்கு சாயரட்சைப் பூசையும், மாலை 4 மணிக்கு 2ஆம் காலப் பூசையும், மாலை 4.15 மணிக்கு வசந்தமண்டபப் பூசையும் நடைபெறவுள்ளன.
எதிர்வரும் வியாழக்கிழமை மாலை கந்தசஷ்டி விரத காலப் பகுதியின் முக்கிய உற்சவமான சூரசம்ஹார உற்சவமும், மறுநாள் வெள்ளிக்கிழமை மாலை திருக்கல்யாண உற்சவமும் இடம்பெறவுள்ளன. (ம-66)

பாராளுமன்ற பொதுத் தேர்தல் -2024
(யாழ் - கிளிநொச்சி மாவட்டம்)

கடற்றொழில் மக்களுக்காக அயராது உழைக்கும் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியையும் அதன் செயலாளர் நாயகம் கௌரவ டக்ளஸ் தேவானந்தா மற்றும் கட்சியின் ஊடக பேச்சாளர் ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன் ஆகியோரை ஆதரித்து வெற்றிபெறச் செய்வோம்.

மத்தியில் கூட்டாட்சி.!
மாநிலத்தில் சுயாட்சி.!

உங்கள் முதன்மைத் தெரிவு தோழர்
(ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம்)
டக்ளஸ் தேவானந்தா



1

ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன் (ரங்கன்)
(கட்சியின் யாழ். மாவட்ட மேலதிக நிர்வாக செயலாளர், கட்சியின் ஊடகப்பேச்சாளர், பருத்தித்துறை பிரதேச சபை முன்னாள் தவிசாளர்)

4 X

X 1 2 3 4 5 6 7 8 9

உடுத்துறை 10ம் வட்டார கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்

## அறிவித்தல்

ஆனைவிழுந்தான், வன்னேரிக்குளம்
**அருள்மிகு முத்துமாரி அம்பாள் ஆலயத்தினால்**
நடத்தப்பட்ட வருடாந்த அதிஷ்டலாப சீட்டிழுப்பின் குலுக்கல் முறையில் வெற்றிபெற்ற பற்றுச்சீட்டு இலக்கங்கள்

1ஆம் பரிசு →20377
2ஆம் பரிசு →21614
3ஆம் பரிசு →19012

**10 ஆறுதல் பரிசுகள்**

1 → 20650
2 → 13889
3 → 21083
4 → 04374
5 → 13493
6 → 02366
7 → 21511
8 → 20942
9 → 01158
10 → 19910

மேற்படி இலக்கம் உடையவர்கள் தங்களுடைய பற்றுச் சீட்டுகளை ஆலய பரிபாலன சபையினரிடம் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தொடர்புகளுக்கு:**
**074 143 8785, 077 076 0511, 076 904 9128**

## University of Jaffna, Sri Lanka
### Faculty of Graduate Studies

The Faculty of Graduate Studies, University of Jaffna invites applications from eligible candidates for the following Postgraduate Programmes.

1. Master of Tamil (Batch X)
2. Master of Public Administration (Batch IV)
3. Master of Regional Planning (Batch IV)

Closing date of the applications: 29.11.2024
Please visit our Website (www.grad.jfn.ac.lk) for more details regarding the required qualifications and fees.
Contact us on 0212223608 for any clarifications.

Registrar
29.10.2024

## கேள்வி அறிவித்தல் - 2025
### திருத்தம்
### வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்

கடந்த 29.10.2024 ஆம் திகதிய உதயன் பத்திரிகையின் 11 ஆம் பக்கத்தில் பிரசுரமாகிய சந்தைகள். இறைச்சிக்கடைகளுக்கான கேள்வி அறிவித்தல் அட்டவணையில் 4 வது நிரலில் உள்ள மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு பணம் பின்வருமாறு திருத்தம் செய்யப்பட்டுள்ளது. என்பதனை அறியத்தருகின்றேன்.

| இல | விபரம் | மீளளிக்கப்படும் கேள்விவைப்புப் பணம் |
|---|---|---|
| மானிப்பாய் பட்டின உப அலுவலகம் | | |
| 1 | மானிப்பாய் பொதுச் சந்தை. (மரக்கறிச்சந்தை, மீன்சந்தை வாகன பாதுகாப்பு மற்றும் பொதுமலசலகூடம் உள்ளடங்கலானது) | 41,470.00 |
| 2 | மானிப்பாய் பொதுச்சந்தை கோழியிறைச்சிக்கடை | 3,421.00 |
| 3 | மானிப்பாய் பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 13,200.00 |
| 4 | மானிப்பாய் பொதுச்சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 534.00 |
| மானிப்பாய் கிராம உப அலுவலகம் | | |
| 1 | காக்கைதீவு மீன் சந்தை (மேற்குபகுதிபுதிய கட்டடம்) (வாகன பாதுகாப்பு மற்றும் பொதுமலசலகூடம் உள்ளடங்கலானது) | 9,141.00 |
| 2 | நவாலி பிரசாத் சந்தை | 1,679.00 |
| 3 | நவாலி பிரசாத் சந்தை கோழியிறைச்சிக்கடை | 374.00 |
| 4 | நவாலி பிரசாத் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 5,156.00 |
| 5 | சாவற்கட்டுச் சந்தை | 3,187.00 |
| பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகம் | | |
| 1 | பண்டத்தரிப்பு பொதுச்சந்தை | 47,910.00 |
| 2 | பண்டத்தரிப்பு பொதுச்சந்தை கோழியிறைச்சிக்கடை | 7,048.00 |
| 3 | சாந்தைச் சந்தை | 9,058.00 |
| 4 | பண்டத்தரிப்பு பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 31,163.00 |
| பண்டத்தரிப்பு கிராம உப அலுவலகம் | | |
| 1 | மாகியபிட்டி பொதுச் சந்தை | 3,630.00 |
| 2 | மாகியபிட்டி பொதுச் சந்தை கோழியிறைச்சிக்கடை | 2,255.00 |
| 3 | மாகியபிட்டி பொதுச் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 5,151.00 |
| 4 | இளவாலை பொதுச் சந்தை | 1,936.00 |
| 5 | இளவாலை பொதுச் சந்தை கோழியிறைச்சிக்கடை | 770.00 |
| 6 | இளவாலை பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 3,913.00 |
| 7 | மாதகல் பொதுச் சந்தை | 3,630.00 |
| 8 | மாதகல் பொதுச் சந்தை கோழியிறைச்சிக்கடை | 349.00 |
| 9 | மாதகல் பொதுச் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 2,858.00 |

**தலைவர்,**
**உள்ளூர் அதிகாரசபை பெறுகைக்குழு,**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை,**
**மானிப்பாய்.**

**திகதி: 02.11.2024**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெண்களுக்குப் புதியதடை

காபுல், நவ. 2
ஆப்கானிஸ்தானில் பெண்கள் சத்தமாக பிரார்த்தனை செய்வதோ, மற்ற பெண்களின் முன் குர்ஆனை ஓதுவதோ தடை செய்யப்பட்டுள்ளதாக தலிபான்கள் தெரிவித்துள்ளனர். (ம)

# 98 ஆயிரம் கோடி ரூபா கடன் பெற்றுள்ளார் அநுர

*ராஜித சரமாரிக் குற்றச்சாட்டு*

**கொழும்பு, நவ. 2**
**ஸ்ரீலங்காவின் கடன்களை மீளச் செலுத்துவதாக ஆட்சிக்குவந்த ஜனாதிபதி அநுர, ஒரே மாதத்தில் 98 ஆயிரம் கோடி ரூபா கடன் பெற்றுள்ளார் என்று முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன குற்றஞ்சாட்டியுள்ளார்.**

எதிர்க்கட்சியில் இருந்துகொண்டு அரசாங்கத்தை விமர்சிக்கலாம். விமர்சனங்களை முன்வைப்பது இலகுவானது. ஆனால், நடைமுறையில் சில விடயங்கள் சாத்தியமா? என்று சிந்திக்க வேண்டும். நடைமுறைச் சாத்தியத்துக்கும், தேர்தல் மேடைகளில் வழங்கப்படும் போலி வாக்குறுதிகளுக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை. இதை அநுர உணர்ந்துள்ளார் என்று ராஜித சேனாரத்ன கூறியுள்ளார்.

அரசாங்கத்தின் வெளிநாட்டு கடனான 42 பில்லியன் டொலரை செலுத்துவது பெரிய விடயமல்ல என அநுரகுமார திஸாநாயக்க தேர்தல் மேடையில் தெரிவித்திருந்தார். ஆனால் அரசாங்கத்தை கொண்டு செல்ல முடியாமல் தற்போது 98 ஆயிரம் கோடி ரூபா கடன் பெற்றுள்ளார். அது மாத்திரமல்லாது பணத்தையும் அச்சிட்டுள்ளனர். இவ்வாறான நடவடிக்கைகளைச் செய்யாமல்தான், ரணில் நாட்டை மீட்டெடுத்தார் என்றும் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

நாட்டில் மாற்றத்தை ஏற்படுத்துவதாக அதிகாரத்துக்கு வந்த இந்த அரசாங்கம், அதிகாரத்துக்கு வந்து ஒரு மாதம் கடந்தும் எந்த மாற்றத்தையும் செய்யவில்லை. முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பை குறைப்பதற்கு மாத்திரமே நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். ஆனால் நாட்டை முன்னேற்ற எந்த வேலைத்திட்டமும் இவர்களிடம் இல்லை. முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பைக் குறைக்கவா மக்கள் இவர்களைத் தெரிவு செய்தனர்? என்றும் ராஜித கேள்வி எழுப்பியுள்ளார். (ம)


## செவிப்புலன் கருவிகள் விற்பனைக்கு



- செவிப்புலன் குறைபாட்டினால் கவலையா ? கவலை வேண்டாம்
- ரூபாய் 9999/= மட்டுமே செலுத்தி செவிப்புலன் கருவி ஒன்றினை உங்களுடையதாக்கிக் கொள்ளுங்கள்
- சென்ற முறை தவற விட்டவர்களுக்கு மீண்டும் ஓர் அரிய சந்தர்பம்
- உங்கள் வீட்டிற்கே வந்து பரிசோதித்து வழங்குகின்றோம்

முன்பதிவுக்கு இன்றே அழையுங்கள்
**077 434 6245**
விரையுங்கள் குறைந்த கையிருப்புகள் மாத்திரமே


## கண்ணீர் அஞ்சலி



கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் பிரதியதிபராக கடமையாற்றும் **திரு. த. கோபாலகிருஷ்ணன்** அவர்களின் அன்பு மாமனார் (மனைவியின் தந்தை)
அமரர்
**சங்கரப்பிள்ளை பாஸ்கரன்**
ஹொலண்ட் நாட்டில் கடந்த (30.10.2024) புதன்கிழமை காலமானார். அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திப்பதுடன் குடும்பத்தாரின் துயரில் பங்குபற்றுகின்றோம்.

**விரிவுரையாளர் கழகம்**
**கோப்பாய் ஆசிரியகலாசாலை, கோப்பாய்.**

## புதுக்குடியிருப்பு பிரதேசசபை, புதுக்குடியிருப்பு
## மீள்கேள்வி அறிவித்தல் - 2025

கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்ட நிலையங்களை 01.01.2025 இலிருந்து 31.12.2025 வரையான காலப்பகுதிக்கு நடாத்துவதற்காக குத்தகை கேள்விகள் கீழ் காட்டப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைய கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கும் காலம் :- 04.11.2024 முற்பகல் 9.00 மணி தொடக்கம் 18.11.2024 பிற்பகல் 01.00 மணி வரை (அலுவலக நாட்களில் மட்டும்)
கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி :- 18.11.2024 பி.ப 01.30 மணி வரை
கேள்வி திறக்கப்படும் திகதி :- 18.11.2024 பி.ப 02.00 மணி

| | குத்தகைவகை | மீளளிக்க முடியாத கேள்விப்படிவ கட்டணம் (NBT,VAT நீங்கலாக) | மீளளிக்ககூடிய கேள்வி வைப்புப்பணம் (NBT,VAT நீங்கலாக) | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த மீள்கேள்வித்தொகை (NBT, VAT நீங்கலாக) |
|---|---|---|---|---|
| | புதுக்குடியிருப்பு உப அலுவலகம். | | | |
| 1 | உடையார்கட்டு பொதுச்சந்தை (விற்பனை நிலையங்கள் நீங்கலாக) | 2,000.00 | 17,000.00 | 341,900.00 |
| 2 | புதுக்குடியிருப்பு பொதுச்சந்தை கருவாட்டுக்கடை- (இல-01) | 2,000.00 | 2,000.00 | 36,000.00 |
| 3 | புதுக்குடியிருப்பு பொதுச்சந்தை கருவாட்டுக்கடை- (இல-02) | 2,000.00 | 2,000.00 | 25,000.00 |
| 4 | கைவேலி கோழி இறைச்சிக்கடை | 2,000.00 | 32,000.00 | 636,363.63 |
| 5 | கைவேலி பன்றி இறைச்சிக்கடை( வளர்ப்புப் பன்றி) | 2,000.00 | 18,000.00 | 363,636.36 |
| | ஒட்டுசுட்டான் உப அலுவலகம். | | | |
| 1 | கற்சிலைமடு பொதுச்சந்தை (விற்பனைநிலையங்கள் நீங்கலாக) | 2,000.00 | 3000.00 | 55,101.00 |
| 2 | கற்சிலைமடு பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 2,000.00 | 2,500.00 | 48,300.00 |
| 3 | கற்சிலைமடு கோழி இறைச்சிக்கடை | 2,000.00 | 5,000.00 | 104,000.00 |
| 4 | முத்துஐயன்கட்டு இடதுகரை பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 2,000.00 | 2,000.00 | 42,500.00 |
| 5 | ஒட்டுசுட்டான் கருவாட்டுக்கடை - (இல-01) | 2,000.00 | 2,000.00 | 2530.00 |
| | ஒலுமடு உப அலுவலகம். | | | |
| 1 | மாங்குளம் பொதுச்சந்தை | 2,000.00 | 14,000.00 | 276,000.00 |
| 2 | திருமுறிகண்டி கட்டண கழிப்பறை | 2,000.00 | 4,000.00 | 77,000.00 |

**நிபந்தனைகள்.**

1. கேள்விப் பத்திரங்களின் இரு பிரதிகளும் தலைவர். பிராந்திய பெறுகைக் குழு. புதுக்குடியிருப்பு பிரதேசசபை.புதுக்குடியிருப்பு என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்கமேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும் அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடுதல் வேண்டும். இரு கேள்விகளும் கேள்வி திறத்தல் நேரத்திற்கு முன்பு கிடைக்கப் பெறல் வேண்டும்.
2. எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு பூரண அதிகாரமுண்டு. ஏற்றுக் கொள்ளக்கூடிய குறைந்த கேள்வித் தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் கேள்வி வைப்புப்பணம் மீளளிக்கப்பட மாட்டாது. சித்திகர கேள்விதாரர் கேள்வித் தொகையின் 1/3 பகுதியை 2024.11.25 **ஆம திகதி பி.ப** 2.00 மணிக்கு முன்னர் குத்தகை வைப்பாக செலுத்தி சபையுடன் ஒப்பந்தமொன்றினை செய்து கொள்ளவேண்டும். மிகுதித்தொகையினை 6 சம பங்குப்படி தை தொடக்கம் ஆனி வரையான காலப்பகுதிக்குள் அம் மாதத்தின் இறுதித் திகதிக்கு முன்னைய வேலை நாட்களில் செலுத்த வேண்டும்.
தவறுமிடத்து மாதக் கட்டணத் தொகையின் 10 வீதம் தண்டமும் மேலதிகமாக அறவிடப்படும்.
3. கேள்விப்பத்திரத்தினை பெற விரும்புவோர் பிரதேச சபை எல்லைக்குள் நிரந்தர வதிவிடத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும். அத்துடன் விண்ணப்பத்துடன் தேசிய அடையாள அட்டையின் உறுதிப்படுத்திய பிரதி அல்லது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தக்கூடிய ஏதேனும் ஓர் ஆவணத்தின் உறுதிப்படுத்திய பிரதி. தாம் வதியும் கிராமசேவையாளரிடம் பெற்றுக்கொள்ளப்பட்ட வதிவிடத்தின் வதிவிட சான்றிதழ் மூலப்பிரதி ஆகியவற்றினை சமர்ப்பித்தல் வேண்டும்.
4. ஏனைய நிபந்தனைகள் தொடர்பான மேலதிக விபரங்களை 02.10.2024 அன்றைய தின உதயன் பத்திரிகையில் பார்வையிடவும்.
5. மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் அலுவலகத்தில் நேரடியாக அல்லது தொலைபேசி மூலம் பெற்றுக்கொள்ளலாம்.


**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**புதுக்குடியிருப்பு பிரதேசசபை, புதுக்குடியிருப்பு.**
**தொலைபேசி இல:-** 0212291023 email-pkipsmullai@gmail.com (cr.41586) (N-1)

## ஸ்பெய்ன் வெள்ளம் உயிரிழப்பு உயர்வு

ஸ்பெய்னில் ஏற்பட்ட வெள்ளப் பேரிடர் காரணமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 150ஆக உயர்ந்துள்ளது. 15 லட்சம் மக்கள் மின்சாரம் இல்லாமல் அவதிப்பட்டு வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)


**வாடகைக்கு**
திருநெல்வேலி யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்திற்கு அண்மையில் அறைகள் ஆண்களுக்கு வாடகைக்கு உண்டு
**தொடர்பு: 076 759 8708**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அணுவாயுத அச்சுறுத்தலும் அமைதிக்கான நோபலும்!




நன்றி : தி ஹிந்து

சமகால நிகழ்வுகளுடனான பொருத்தப்பாட்டுடன் அமைந்துவிடும் அங்கீகாரங்கள் மதிப்புமிக்கவை.

அணு ஆயுதத் தாக்குதல் பதற்றம் அதிகரித்திருக்கும் இன்றைய சூழலில், அணு ஆயுதங்களுக்கு எதிராகப் போராடிவரும் 'நிஹான் ஹிடாங்க்யோ' என்னும் ஜப்பானிய அமைப்பினருக்கு அமைதிக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டிருப்பது மிகவும் முக்கியத்துவமானது.

ஜப்பானில் அமெரிக்கா நிகழ்த்திய அணு ஆயுதத் தாக்குதலின் 80ஆவது நினைவு நாள் அடுத்த ஆண்டில் அனுசரிக்கப்படவிருக்கும் நிலையில், இந்தப் பரிசு அறிவிக்கப்பட்டிருக்கிறது. அணு ஆயுதம் இல்லா உலகம் என்னும் இலக்கை எட்டுவதற்காக உழைத்துவரும் இந்த அமைப்பில் அங்கம் வகிக்கும் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்டோரும், ஹிரோஷிமா, நாகசாகி நகரங்கள் மீது அமெரிக்கா நிகழ்த்திய அணுகுண்டுத் தாக்குதலில் எப்படியோ உயிர் பிழைத்தவர்கள். அணுகுண்டுக் கதிர்வீச்சு காரணமாக உடல் ரீதியாக ஏராளமான பாதிப்புகளுக்குள்ளான இவர்கள் 'ஹிபாகுஷா' என்னும் பெயரில் விளிக்கப்படுகின்றனர். இன்றைய போர்ப் பதற்றம் குறித்து ஆழ்ந்த கவலை தெரிவிக்கும் இந்த அமைப்பினரின் கதை உலகையே உலுக்கக்கூடியது!

## இரக்கமற்ற தாக்குதல்

இரண்டாம் உலகப் போரின்போது முக்கியமான எதிரியான ஜேர்மனியை விடவும் அமெரிக்காவின் கண்களை உறுத்திக் கொண்டிருந்த நாடு ஜப்பான்தான். அணுகுண்டு வீசித் தாக்குதல் நடத்தும் அளவுக்கு ஜப்பான் மீது அமெரிக்கா வஞ்சம் வைக்க 'பேர்ல் ஹார்பர்' மீதான அதிரடித் தாக்குதல் ஒரு காரணம். அத்துடன், ஒரு காலத்தில் தனது மறைமுக உதவியைப் பெற்று வளர்ந்த ஜப்பான், ஆசியாவில் தனக்கு வணிகப் போட்டியாளராக உருவெடுத்ததும் அமெரிக்காவின் ஆத்திரத்துக்கு ஒரு காரணமாகச் சொல்லப்படுகிறது. 1945ஆம் ஆண்டு ஓகஸ்ட் 6ஆம் திகதி ஹிரோஷிமா மீது, 'லிட்டில் ப்பாய்' என்கிற அணுகுண்டும், ஓகஸ்ட் 9ஆம் திகதி நாகசாகி மீது 'பட் மேன்' என்கிற அணுகுண்டும் வீசப்பட்டன. இரு நகரங்களிலும் தலா 1.2 லட்சத்துக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். அந்த அணுகுண்டுகளின் கதிர்வீச்சு காரணமாக ஏற்பட்ட பல்வேறு பாதிப்புகளால் இதுவரை 4 லட்சத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்திருக்கிறார்கள்.

## முடக்கப்பட்ட குரல்கள்

இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர், மறுகட்டமைப்பு என்ற பெயரில் 1945 - 1952ஆம் ஆண்டு காலகட்டத்தில் ஜப்பானில் அமெரிக்காவின் ஆதிக்கம் வியாபித்திருந்தது. அப்போது அணுகுண்டு வீச்சுப் பாதிப்பு குறித்துப் பேசவே ஹிபாகுஷாக்களால் இயலவில்லை.

கூடவே, புற்றுநோய், தோல் நோய்கள், கருச்சிதைவு, சிசு இறப்பு என ஏராளமான பாதிப்புகளுக்கு ஆளான அவர்களும் அவர்களது சந்ததியினரும் சமூக ரீதியிலான புறக்கணிப்பையும் எதிர்கொள்ள நேர்ந்தது. திருமண உறவு முதல் வேலைவாய்ப்பு வரை பல்வேறு தளங்களில் அவர்களில் பலர் ஒதுக்கிவைக்கப்பட்டனர்.

1956ஆம் ஆண்டில் ஹிபாகுஷாக்கள் ஒருங்கிணைந்து தங்கள் கனத்த மௌனத்தைக் கலைத்தனர். நிஹான் ஹிடாங்க்யோ அமைப்பை நிறுவி, அணு ஆயுதங்களுக்கு எதிரான உலகளாவிய அறப்போரைத் தொடங்கினார்கள். இந்தியா உட்படப் பல்வேறு நாடுகளுக்குச் சென்று தங்கள் கண்ணீர்க் கதைகளை விவரித்தனர்.

1976ஆம் ஆண்டில் நிஹான் ஹிடாங்க்யோவின் பிரதிநிதியாக டெடுமி தனாகா அமெரிக்காவுக்குச் சென்றிருந்த போது, ஹிரோஷிமா, நாகசாகி மீதான அணுகுண்டு வீச்சு தொடர்பாகப் பலருக்குச் சரியான தகவல் தெரியவில்லை என்பதைக் கண்டு அதிர்ச்சியடைந்தார். உயிரிழப்புகளின் எண்ணிக்கை குறித்து ஐக்கிய நாடுகள் சபையே சரியான தகவல்களைக் கொடுக்கவில்லை என்பதுதான் நிதர்சனம். எனினும், இந்த அமைப்பின் முயற்சியால் அணு ஆயுதம் தொடர்பான விழிப்புணர்வு உலக நாடுகளிடம் பரவலாக்கப்பட்டது.

அதேவேளையில், வரலாற்றின் மிக மோசமான பேரழிவுக்குப் பின்னரும் அணுசக்தித் துறையில் அமெரிக்கத் தொழில்நுட்பங்களையும் நிதி உதவியையும் ஜப்பான் சார்ந்திருந்தது வரலாற்றின் விநோதங்களில் ஒன்று. 2011ஆம் ஆண்டில் ஜப்பானில் ஏற்பட்ட நிலநடுக்கம், சுனாமி ஆகிய பேரிடர்களின்போது புகுஷிமா அணு உலையில் நிகழ்ந்த விபத்து, அணு ஆபத்து குறித்த உரையாடல்களை மீண்டும் தொடங்கிவைத்தது.

### சமகாலச் சூழல் மீதான பார்வை

அமைதிக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டது தொடர்பாகப் பேசிய நிஹான் ஹிடாங்க்யோ அமைப்பின் தலைவர் தொஷியுகி மிமாகி, 'காஸாவில் அமைதியை நிலைநாட்டப் போராடுபவர்கள் இந்த விருதை வென்றிருக்கவேண்டும்' எனக் கூறியிருப்பது, இந்த அமைப்பின் உன்னத நோக்கத்துக்கு ஒரு சான்று.

காஸாவில், உடலெங்கும் ரத்தம் வழியும் குழந்தைகளை அவர்களின் பெற்றோர் தங்கள் கைகளில் ஏந்தியிருக்கும் காட்சிகள் 80 ஆண்டுகளுக்கு முந்தைய ஜப்பானின் காட்சிகளைத் தனக்கு நினைவூட்டுவதாகக் கண்ணீருடன் தெரிவித்திருக்கிறார் மிமாகி.

உக்ரைன் மீதான ரஷ்யாவின் போர், காஸா மீதான இஸ்ரேலின் போர் என இரண்டு போர்கள் நிகழ்ந்துகொண்டிருக்கும் இன்றைய சூழலில், அணு ஆயுத அச்சுறுத்தல்கள் அதிகரித்திருக்கின்றன. உக்ரைனில் மட்டுமல்லாமல், ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் அணு ஆயுதத் தாக்குதல்கள் நடத்தப்படும் என்று எச்சரித்திருக்கும் ரஷ்ய அதிபர் புடின், அணு ஆயுதம் இல்லாத நாடு ரஷ்யாவைத் தாக்கினாலும், அந்த நாட்டின் மீது அணு ஆயுதத் தாக்குதல் நடத்தப்படும் என்று மிரட்டி வருகிறார்.

ஹிஸ்புல்லா அமைப்பினர் மீதான இஸ்ரேலின் தாக்குதல்களால் ஆத்திரமடைந்திருக்கும் ஈரான் மேலும் சினம் கொண்டு அணு ஆயுதத் தயாரிப்பில் ஈடுபடலாம் என்ற அச்சமும் பரவலாக எழுந்திருக்கிறது. ஈரானின் ஏவுகணைத் தாக்குதல்களுக்குப் பதிலடி கொடுக்கும் வகையில், அந்த நாட்டின் அணு உற்பத்தி மையங்கள், எண்ணெய் உற்பத்தி மையங்கள் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தலாம் எனக் கூறப்படுகிறது. இதற்கு அமெரிக்க முன்னாள் அதிபர் ட்ரம்ப் தூபம் போடுவது கவனிக்கத்தக்கது.

### குலைந்துபோன நம்பிக்கை:

ஈரானின் அணு ஆயுத உற்பத்தியைத் தடைசெய்வதை முதன்மை நோக்கமாகக் கொண்டு உருவாக்கப்பட்ட ஈரான் அணு ஒப்பந்தம் ஒபாமா ஆட்சிக் காலத்தில் 2015ஆம் ஆண்டில் கையெழுத்தானது. அமெரிக்காவுடன் ரஷ்யா, சீனா, பிரிட்டன், பிரான்ஸ், ஜேர்மனி ஆகிய நாடுகளும் ஈரானுடன் இந்த ஒப்பந்தத்தை மேற்கொண்டன. ஆனால், ஆரம்பம் முதலே இந்த ஒப்பந்தத்தை எதிர்த்துவந்த ட்ரம்ப், 'வரலாற்றிலேயே மிக மோசமான ஒப்பந்தம்' என அதிபர் தேர்தலுக்கான பிரசாரங்களில் முழங்கினார்.

அவர் அதிபரான பின்னர் 2018ஆம் ஆண்டில் இந்த ஒப்பந்தத்திலிருந்து அமெரிக்கா வெளியேறியது. மீண்டும் அந்த ஒப்பந்தம் உயிர் பெறுமா என்னும் எதிர்பார்ப்புகள் நிலவினாலும், ஜோ பைடன் அரசு அதில் அதிக முனைப்புக் காட்டவில்லை என்று விமர்சிக்கப்படுகிறது. இந்தச் சூழலில் ஈரானுடன் இஸ்ரேல் மல்லுக்கு நிற்பதால், இனி அந்த ஒப்பந்தத்துக்குள் ஈரான் வரும் என்கிற நம்பிக்கையும் குலைந்திருக்கிறது.

ஈரானுடனான அணு ஆயுத ஒப்பந்தம் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டிருந்தால் சர்வதேச அளவில் பல்வேறு பிரச்சினைகள் நடைபெறாமல் தடுக்கப்பட்டிருக்கும். ஈரான் அரசின் ஆதரவுடன் இயங்கும் ஹமாஸ் அமைப்பு, இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தும் அளவுக்குச் சென்றிருக்காது என ஒபாமா ஆட்சியின்போது துணைப் பாதுகாப்பு ஆலோசகராக இருந்த பெஞ்சமின் ஜே.ரோட்ஸ் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

அமெரிக்கா - ரஷ்யா இடையிலான பனிப்போர்க் காலத்திலும் இரண்டு வல்லரசுகளுக்கும் இடையிலான அணு ஆயுத மோதல் நடக்கலாம் என்கிற அச்சுறுத்தல் முக்கியமான பங்கு வகித்தது. இன்றைய திகதியில் அமெரிக்கா, ரஷ்யா, பிரிட்டன், பிரான்ஸ், சீனா, இந்தியா, பாகிஸ்தான், இஸ்ரேல், வடகொரியா ஆகிய நாடுகள் அணு ஆயுதம் வைத்திருப்பதாகக் கருதப்படுகிறது. இதில் பல நாடுகள் அணு ஆயுதங்களின் எண்ணிக்கையை அதிகரித்துக் கொண்டே வருவதாகவும் செய்திகள் வெளியாகின்றன.

ஹிரோஷிமா, நாகசாகி பேரழிவுக்குப் பிறகு உலகில் எங்கும் அணு ஆயுதத் தாக்குதல் நடைபெறவில்லை என்றாலும் அணு ஆயுத நாடுகள் அவற்றை நவீனப்படுத்துவதில் ஆர்வம் செலுத்துவதாகவும், வேறு பல நாடுகளும் அணு ஆயுத நாடுகளின் பட்டியலில் இடம்பெற முயல்வதாகவும் நோபல் பரிசுக் குழு கவலையுடன் தெரிவித்திருக்கிறது.

போரில் ஈடுபடும் நாடுகளைத் தார்மிகரீதியில் கண்டிப்பதைத் தாண்டி, அவற்றின் மீது உறுதியான நடவடிக்கை எடுக்கும் நிலையில் ஐக்கிய நாடுகள்சபை வலுவாக இல்லை என்பதால், தற்காப்புக்காக அணு ஆயுதங்களைத் தயாரிக்கவோ, அணு ஆயுத நாடுகளைச் சார்ந்திருக்கவோ வேண்டிய நிலையில் பல நாடுகள் இருக்கின்றன.

இப்படி அணு ஆயுதம் தொடர்பான சர்ச்சைகள், போர்ச் சூழல் இன்றும் உயிர்ப்புடன் இருக்கும் நிலையில்தான், ஹிபாகுஷாக்களுக்கு அமைதி நோபல் பரிசு அறிவிக்கப்பட்டிருக்கிறது. 'நாங்கள் உயிருடன் இருக்கும்போதே அணு ஆயுதங்களை ஒழித்துவிடுங்கள்' என நிஹான் ஹிடாங்க்யோ அமைப்பின் தலைவர் மிமாகி உருக்கமாக வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

குழந்தைகள் மீதும், மருத்துவமனைகள் மீதும் ஏவுகணை வீசிப் படுகொலை செய்யத் தயங்காத நாடுகள், சர்வதேச அரங்கில் துணிச்சலுடன் வலம்வரும் நிலையில், மனித குலத்தின் அடிப்படை விழுமியங்களைக் கைவிடாமலிருக்கக் கோரும் இதுபோன்ற இறைஞ்சல்கள் செவிமடுக்கப்படுமா என்ன?

## குண்டுவெடிப்பில் மாணவர்கள் பலி

பாகிஸ்தானின் பலூசிஸ்தான் மாகாணத்தில், பாடசாலை ஒன்றுக்கு அருகே இடம் பெற்ற குண்டுவெடிப்பில் மாணவர்கள் உட்பட 7 பேர் கொல்லப்பட்டுள்ளனர். இன்னும் பலர் காயமடைந்துள்ளனர். (ம)

## இஸ்ரேலின் தாக்குதலில் 24 பொதுமக்கள் சாவு

லெபனானின் எல்லைப் பகுதியில், இஸ்ரேலால் இன்று நடத்தப்பட்ட ஏவுகணைத் தாக்குதலில் 24 பொதுமக்கள் உயிரிழந்துள்ளனர் என்று போர்க்கண்காணிப்பகங்கள் அறிவித்துள்ளன. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஸ் கவிழ்ந்து விபத்து



# பல்கலை மாணவர்கள் இருவர் உயிரிழப்பு!

## 39 பேர் படுகாயம்

கொழும்பு, நவ. 2
கல்விச் சுற்றுலா சென்ற பஸ் பதுளை - மஹியங்கனை வீதியில் அம்பகாலுய பகுதியில் நேற்று வெள்ளிக்கிழமை காலை விபத்துக் குள்ளானதில் பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் உயிரிழந் துள்ளனர். மேலும் 39 பேர் காயம டைந்துள்ளனர்.

கொத்தலாவல பாதுகாப்பு பல்க லைக்கழகத்தில் கல்வி பயிலும் மாணவர்கள் பயணித்த பஸ் ஸொன்றே விபத்துக்குள்ளாகியுள் ளது.

விபத்தில் காயமடைந்தவர்கள் பதுளை மருத்துவமனையில் சேர்க் கப்பட்டுள்ளனர்.

இவர்களில் இரு பல்கலைக்கழக மாணவர்கள் உயிரிழந்துள்ளனர். விபத்துத் தொடர்பான விசாரணை களைபொலிஸார் முன்னெடுத்துள் ளனர். (ச-44)

# பிக்குவுக்கு கடூழிய சிறை

கொழும்பு, நவ.2
வன்புணர்வுக் குற்றச்சாட் டில் கைதுசெய்யப்பட்ட பௌத்த பிக்கு ஒருவருக்கு கொழும்பு மேல் நீதிமன் றம் ஏழு வருட கடூழிய சிறைத்தண்டனை விதித் துள்ளது.

மேலும் குற்றவாளிக்கு 4500 ரூபா அபராதமும் பாதிக்கப்பட்டவருக்கு ஒரு இலட்சம் ரூபா இழப்பீடும் வழங்க உத்தரவிட்டுள் ளது. (ச)

# அரச ஊழியர் ஊதிய உயர்வு அரசாங்கமே பொய்யுரைப்பு

## சாகல ரத்நாயக்க தெரிவிப்பு

கொழும்பு, நவ. 2
அரச உத்தியோகத்தர்களின் சம்பள விவகாரத்தில் பிரதமர் ஹரிணி அமரசூரிய தொடர்ந்தும் பொய்க ளையே கூறிக் கொண்டிருக்கின்றார். அரசியலில் எந்தளவு நெருக்கடிகளை எதிர்கொண்டாலும் முன் னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஒருபோதும் பொய் கூறி மக்களை ஏமாற்றவில்லை.


-இவ்வாறு முன்னாள் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சாகல ரத்நாயக்க தெரித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்துடனான இணக்கப்பாடு தொடர்பில் பின்பற்றும் கொள்கை என்ன என்பது தொடர்பில் தெளிவற்ற நிலைமையே காணப்படுகிறது.

அரசாங்கம் தெளிவாக இதுதான் எம்முடைய கொள்கை என்று குறிப்பிடவில்லை. மறுபுறம் அரச உத்தியோ கத்தர்களின் சம்பள விவகாரத்திலும் அரசாங்கம் இவ்வாறான குழப்பத்திலேயே பயணித்துக் கொண்டி ருக்கிறது.

பிரதமர் ஹரிணி அமரசூரிய, முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொய் கூறியுள்ளதாகத் தெரி வித்துள்ளார். உண்மையில் தேசிய மக்கள் சக்தி பொய் கூறியுள்ளது. தேர்தலுக்கு முன்னர் 6 மாதங் களுக்கொருமுறை சம்பள அதிகரிப்பை வழங்குவதா கக் கூறிய ஜே.வி.பி. தற்போது அதனை முற்றாக மறுக்கிறது. பிரதமராக பொறுப்பான பதவியிலிருந்து கொண்டு பொய் கூறிக் கொண்டிருப்பவரை நாடாளு மன்றத்துக்கு தெரிவு செய்யவேண்டுமா என்பதை மக்கள் சிந்திக்க வேண்டும் - என்றார். (ச-இ)



# இலங்கைக்கு சீனா தோள்கொடுக்கும்!

## சீனத்தூதுவர் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 2
இலங்கையின் புதிய அரசாங்கத்தின் அபிவிருத்தித் தேவைகளை சீன அரசாங்கம் முழுமையாகப் பரி சீலித்து, பொருத்தமான பயிற்சித் திட்டங்களின் செயற் திறனை மேம்படுத்துவதற்கு தயாராகவே உள்ளதாக சீனத்தூதுவர் கீ சென்ஹொங் தெரிவித்துள்ளார்.

சீன அரசாங்கம் இலங்கையின் கல்வித்துறைக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கிறது. சீனாவில் சுமார் 13,000 இலங்கையர்கள் இதுவரையில் பயிற்சிகளி லும், கற்கைகளிலும் பங்கேற்றுள்ளனர்.

புதிய ஆண்டில், இலங்கையின் புதிய அரசாங்கத்தின் அபிவிருத்தித் தேவைகளை சீன அரசாங்கம் முழு மையாகப் பரிசீலித்து, பொருத்தமான பயிற்சித் திட் டங்களின் செயற்திறனை மேம்படுத்துவதுடன், மேலும் பங்கேற்பாளர்களை சீனாவுக்குச் சென்று கல்வி கற்பதற்கு நடவடிக்கைகளை முன்னெடுக்க வுள்ளது.

அனைவருக்கும் நல்ல ஆரோக்கியம், சுமூகமான வேலைச்சூழல், மகிழ்ச்சியான குடும்பம் நீடிப்பதற்கு வாழ்த்துவதோடு சீனாவுக்கும் இலங்கைக்கும் இடை யிலான நிரந்தர நட்புறவை நான் விரும்புகிறேன் - என்றார். (ச)

# பயங்கரவாதத்தை இல்லாதொழித்த மஹிந்தவுக்குப் பாதுகாப்புத் தேவை

## பெரமுன வலியுறுத்து

கொழும்பு, நவ. 2
புலிகள் அமைப்புக்கு இன்றளவி லும் தடைதொடர்கின்ற நிலை யில் போரை முடிவுக்குக் கொண்டு வந்த மஹிந்தவுக்குரிய பாது காப்பு எந்த அடிப்படையில் குறைக்கப்பட்டது. அவருக்கு ஏதேனும் நடந்தால் அதற்கு அநு ரகுமார திஸாநாயக்க தலைமை யிலான அரசுதான் பொறுப்பு கூறவேண்டும்.

- இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் நாடாளு மன்ற முன்னாள் உறுப்பினர் சஞ்சீவ எதிரிமான்ன தெரிவித் தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பயங்கரவாதிகளிடமிருந்து இந் நாட்டை மீட்ட தலைவரே மஹிந்த ராஜபக்ச. போரை முடிவுக்குக் கொண்டுவந்த தலைவருக்கு வழங்கப்படும் பாதுகாப்பே மஹிந்தவுக்கு வழங்கப்பட்டிருந் தது. உலகில் இருந்த பயங்கர மான பயங்கரவாத அமைப்பான புலிகளையே மஹிந்த தோற்கடித் தார். புலிகளைப்போன்றதொரு பலமான பயங்கரவாத அமைப்பு [illegible] இருக்கவில்லை. முப் படைகளும் அந்த அமைப்புக்கு



இருந்தது. இப்படிப்பட்ட அமைப் பிடமிருந்துதான் இந்நாட்டை மஹிந்த ராஜபக்ச பாதுகாத்துக் கொடுத்தார்.

புலிகள் அமைப்பு ஒடுக்கப்பட்டு விட்டதே என சிலர் கூறலாம். வடக்கு, கிழக்கில் புலிகள் ஒழிக் கப்பட்டிருந்தாலும் அவர்களின் சித்தாந்தம் உலகளவில் உள் ளது. அதனால்தான் ஐரோப்பிய ஒன்றியத்தில் புலிகளுக்கு இன் னும் தடை உள்ளது. அமெ ரிக்கா, பிரிட்டன் மற்றும் இந்தியா என்பனவும் இன்றளவில் அவ்வ மைப்புக்கு தடை விதிக்கின்றன.

எனவே, மஹிந்தவுக்கான பாது காப்பு அவசியம். மஹிந்த ராஜ பக்சவுக்கு ஏதேனும் பிரச்சினை ஏற்பட்டால் அநுர தலைமையி லான அரசுதான் அதற்குரிய பொறுப்பை ஏற்க வேண்டும்.- என்றார். (ச-44)

# ஆசன ஒதுக்கீட்டில் பாகுபாடு

## வேட்பாளர் குணாளன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ.1
திட்டமிட்ட வகையில் யாழ். தேர்தல் மாவட்டத்தின் நாடா ளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை ஏழிலிருந்து ஆறாகக் குறைக்கப்பட்டுள் ளது. இது தொடர்பாக யாழ். தேர்தல் மாவட்டத்தில் போட்டி யிடுகின்ற அரசியல் தலைவர் கள் துளியளவும் அக்கறை செலுத்தவில்லை. மாறாக ஆறு ஆசனங்களையும் பங்கு பிரித்து தமிழ் மக் களை கூறு போடுவதிலேயே அவர்கள் கண்ணும் கருத்து மாக உள்ளனர்.

இவ்வாறு சனநாயக தமிழரசு கூட்டமைப்பின் வேட்பாளர் கருணாகரன் குணாளன் தெரிவித்துள்ளார்.

1972 ஆம் ஆண்டு சிறிமா பண்டாரநாயக்க தலைமையி லான அரசினால் கொண்டு வரப்பட்ட இனப்பாகுபாடு ரீதி யிலான பல்கலைக்கழக மாண வர்களுக்கான தரப்படுத்தல் நிலை போன்றதொரு செயற் பாடாகவே இதனையும் கரு தவேண்டியுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனை அபிவிருத்திச் சபை நியமனங்களால் விதிமீறல்


## தேர்தல் ஆணைக்குழுவில் முறைப்பாடு

**கொழும்பு, நவ.2**
**யாழ்ப்பாணத்தில் உள்ள பனை அபிவிருத்திச் சபையால் அண்மையில் மேற் கொள்ளப்பட்ட நியமனங்கள் தேர்தல் சட்டங்களுக்கு முரணான வகையில் இடம்பெற்றுள்ளது எனத் தெரிவித்து ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நெஷனல் ஸ்ரீலங்கா நிறுவனம் இலங்கை தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் முறைப் பாடு பதிவுசெய்துள்ளது.**

பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் பதவிக்கு செல்வின் இரேனியஸ் மரியாம்பிள்ளை ஒக்ரோபர் 10ஆம் திகதி நியமிக்கப்பட்டதோடு, அதைத் தொடர்ந்து 12 நாள்கள் இடைவெளியில் அவர் நீக்கப்பட்டு, அவருக்குப் பதிலாக விநாயகமூர்த்தி சகாதேவன் அதே பதவிக்கு நியமிக்கப்பட்டார்.

இவ்வாறான நியமனங்கள், பொதுமக்களின் நம்பிக்கையை பலவீனப்படுத்துவதுடன், தேர்தல் நடைமுறையின் நேர்மைக்கும், ஜனநாயக செயல்முறையின் நியாயத்தன்மையும் கேள்விக்குட்படுத்தப்படலாம்.

இது குறித்து இலங்கை தேர்தல்கள் ஆணைக்குழு விசாரணைகளை நடத்தி உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது. (ச-இ)



# கற்றல் உபகரணங்கள் வழங்கி வைப்பு!

யாழ்ப்பாணம், நவ. 2
தீபாவளி தினத்தை முன்னிட்டு வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கொஸ்தாவின் தலைமையில் வளர்மதி முன்பள்ளி மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன. நிகழ்வில் வட்டுக்கோட்டை பொலிஸ் உத்தியோகத்தர்கள், முன்பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர் ஆகியோர் கலந்து கொண்டனர். (ச-45-27)



# கௌரவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 2
கொடிகாமம் மக்கள் வங்கிக் கிளையால் கொடிகாமம் குடும்ப முன்பள்ளி ஆசிரியர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு மக்கள் வங்கி முகாமையாளர் திருமதி பி.விசாகன் தலைமையில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மக்கள் வங்கிப் பிராந்திய முகாமையாளர் க.கோடீஸ்வரன், சிறப்பு விருந்தினர்களாக யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி ஓய்வு நிலை விரிவுரையாளர் க.இ.கமலநாதன் போக்கட்டி, அ.த.க. பாடசாலை அதிபர் தி.அபராஜிதன், யாழ். மக்கள் வங்கி உதவி பிராந்திய முகாமையாளர் திருமதி யாழினி சுரேஸ்குமார், முன்பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் உட்படப் பலரும் கலந்து கொண்டனர். (ச-25-159)



# யாழ். ஆலயங்களில் கேதார கௌரி வழிபாடு

யாழ்ப்பாணம், நவ.2
யாழ்.மாவட்டத்தில் அமைந்துள்ள சிவன், அம்மன் ஆலயங்களில் நேற்று வெள்ளிக்கிழமை சிவ விரதங்களில் முக்கியமானதாக விளங்கும் கேதாரகௌரி விரதப் பூர்த்திச் சிறப்பு வழிபாடுகள் பக்திபூர்வமாகவும், சிறப்பாகவும் நடைபெற்றன. பஞ்ச ஈஸ்வரங்களில் ஒன்றாக விளங்கும் கீரிமலை நகுலாம்பிகா தேவி சமேத நகுலேஸ்வரர் சிவன் ஆலயம், நல்லூர்ச் சிவன் ஆலயம் உள்ளிட்ட பல ஆலயங்களில் பல நூற்றுக்கணக்கானோர் கலந்துகொண்டு வழிபாடுகளில் ஈடுபட்டதுடன் கேதாரகௌரிக் காப்பினையும் பெற்றுச் சென்றனர். (ச-66)



# பரிசளிப்பு விழாவும் கௌரவிப்பு நிகழ்வும்

மன்னார், நவ.2
மன்னார் இந்து சமய வளர்ச்சிச் சங்கம் நடத்திய சமய அறிவுப்போட்டிகளின் பரிசளிப்பு நிகழ்வும், இறை இசைக் கலைஞர் கௌரவிப்பும் மன் சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக மன்னார் மாவட்டச் செயலாளர் கனகசபாபதி கனகேஸ்வரன், சிறப்பு விருந்தினர்களாக நானாட்டான் பிரதேச செயலாளர் சிவசம்பு கனகாம்பிகை, மன்னார் நகர பிரதேச செயலாளர் ம.பிரதீப், திருக்கேதீச்சர ஆலய திருப்பணிச் சபைச் செயலாளர் சு.பிருந்தாவனநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் இறையிசைக் கலைஞர்கள் பா.கஜீவன் நாதஸ்வரத்துக்கான 'இளம் நாதஸ்வரக் கலைத் தென்றல்' பட்டத்தையும், வீ.யோகேஸ்வரன் 'இளம் தவில் கலைச் சொற்சுடர்' பட்டத்தையும் சங்கம் சார்பாக மன்னார் மாவட்டச் செயலர் க.கனகேஸ்வரன் வழங்கிக் கௌரவித்தார். (ஙி-60)

# துப்புரவு

யாழ்ப்பாணம், நவ. 2
யாழ். நகரில் தீபாவளிப் பண்டிகையின் போது நடைபாதை வியாபாரிகள் முற்றவெளி பிரதேசத்தில் தமது பொருட்களை விற்பனை செய்தமையால் அப்பகுதியில் பொலித்தீன்கள் வீசப்பட்டு இருப்பதோடு, மாநகராட்சி மன்றம் இதனை அகற்றியும் வருகின்றனர். (ச-45-17)

# தெய்வீக இன்னிசை

யாழ்ப்பாணம், நவ. 2
சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் வாராந்த நிகழ்வு சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் காரைநகர் கிழவன்காடு கலாமன்றத்தின் இசை அரங்கம் திருவாசகக் குயில் லீலாவதி இராசரத்தினத்தின் நெறியாள்கையில் நடைபெற்றது. (ச-45-66)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜபக்சக்களுக்கு எதிராக சர்வதேச விசாரணை தேவை

## கனேடிய எதிர்க்கட்சித் தலைவர் வலியுறுத்து

ஒட்டாவா, நவ. 2

தமிழர்கள் மீதான இனப்படுகொலைகளுக்காக ராஜபக்சக்களுக்கு எதிராக சர்வதேச விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என கனேடிய எதிர்க்கட்சித் தலைவர் பொலியேவ் வலியுறுத்தியுள்ளார்.

அண்மையில் நடைபெற்ற ஸ்ரீலங்கா ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்று புதிதாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கம், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில், இலங்கை தொடர்பில் முன்மொழியப்பட்ட பிரேரணையை முற்றாக நிராகரித்தமைக்கும் பொலியேவ் தனது அதிருப்தியைத் தெரிவித்துள்ளார்.

'தமிழ் மக்கள் மீதான இலங்கை அரசாங்கத்தின் மனித உரிமைகள் மீறல்களுக்கு எதிராக நாம் குரல்கொடுக்கவேண்டும். நாம் ராஜபக்சக்களை சர்வதேச அரங்கில் விசாரணைக்கு உட்படுத்த வேண்டும். இதுவே என் நிலைப்பாடு. இதை நான் தீர்க்கமாக முன்னிறுத்துகின்றேன்' என்றும் பொலியேவ் கூறியுள்ளார்.

கென்சர்வேடிவ் கட்சியின் ப்ரையன் மல்ரொனியே முதன்முறையாக தமிழர்களுக்கு கனடாவுக்குள் இடமளித்தனர். அத்துடன், எமது கட்சியைச் சேர்ந்த ஜோன் பெய்ர்ட் மற்றும் ஸ்ரீவன் ஹார்பர் ஆகியோர் கடந்தகால அரசாங்கத்தால் நிகழ்த்தப்பட்ட மீறல்கள் தொடர்பில் எதிர்ப்பை வெளிக்காட்டும் வகையில் கொழும்பில் நடைபெற்ற பொதுநலவாயமாநாட்டைப்புறக்கணித்தனர்.

எனவே தமிழர்களுக்கு ஆதரவான நிலைப்பாட்டை கன்சர்வேடிவ் முன்வைப்பது இது முதல்முறையல்ல என்றும் பொலியேவ் தெரிவித்துள்ளார். (ம)



### மஹிந்தவின்...

ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

மஹிந்த ராஜபக்சவின் பாதுகாப்பு குறைக்கப்பட்டுள்ளது என்றவாறாக பெரமுனவினர் தொடர்ந்தும் பரப்புரைகளில் ஈடுபட்டுவரும் நிலையிலேயே, அவ்வாறு பாதுகாப்பு ஏற்பாடுகள் குறைக்கப்படவில்லை என்று ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவுக்கு 3 வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன. அதற்காக மாதாந்த எரிபொருள் கொடுப்பனவாக ஆயிரத்து 950 லீற்றர் வழங்கப்படுவதுடன், அந்த வாகனங்களுக்காக மூன்று சாரதிகளும் வழங்கப்பட்டுள்ளனர். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவுக்கான பாதுகாப்பு, பாதுகாப்பு அமைச்சு மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சால் வழங்கப்பட்டு வருகின்றது என்றும் ஜனாதிபதி ஊடகப்பிரிவு அறிக்கையிட்டுள்ளது. (அ-ம-44)

### பயங்கரவாதத்...

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்தால், பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்படாது என்று தொடர்ச்சியாகச் சிலர் தெரிவித்து வருகின்றனர். அவர்கள் ஒரு பதற்றநிலையை ஏற்படுத்துவதுடன், எமக்கு எதிராக அவதூறையும் சுமத்தி வருகின்றனர். குறிப்பாக சுமந்திரன் இவ்வாறான கருத்துக்களை போலியாகவும், திரிவுபடுத்தியும் கூறி வருகின்றார். இது ஆரோக்கியமானது அல்ல. நாம் ஆட்சிக்கு வந்தால் (தேசிய மக்கள் சக்தி) பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்படும் என்பதை நான் உறுதியாகக் கூறுகின்றேன். பயங்கரவாதத் தடைச்சட்டத்தால் அதிகளவான பாதிப்புகளை எதிர்கொண்டவர்கள் தமிழர்கள். இந்தச் சட்டத்தின் கொடுமையை, இந்தச் சட்டம் தரும் வலியை நாம் அறிந்து வைத்துள்ளோம். ஆதலால், அதை நிச்சயம் நீக்கியே தீருவோம். இது எமது கொள்கைப் பிரகடனத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கின்றது.

அத்துடன், மாகாணசபைத் தேர்தல்கள் தேசிய மக்கள் சக்தியின் ஆட்சியில் நடத்தப்படாது என்றும், மாகாணசபைத் தேர்தல்களை தேசிய மக்கள் இல்லாமல் செய்யும் என்றும் கருத்துக்கள் பகிரப்பட்டு வருகின்றன. உண்மையில் இந்தக் கருத்துக்கள் அனைத்தும் திரிவுபடுத்தப்படுகின்றன. மாகாணசபைத் தேர்தல் உடனடியாக நடத்தப்படும். முடியுமான விரைவில் நாம் அவற்றை நடத்துவோம். அத்துடன், தமிழ் அதிகாரிகளின் நியமனங்களை நாம் மேற்கொள்வோம். தமிழர்கள் தமது தேவைகளுக்கு கொழும்புக்கு ஓடிச்செல்லாமல், யாழ்ப்பாணத்தில் தம் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளக் கூடிய நடவடிக்கைகளை நாங்கள் முன்னெடுப்போம் - என்றார். (அ-ம-26)

### 17 முறைப்பாடுகள்...

"வன்னித் தேர்தல் மாவட்டத்தில் 17 முறைப்பாடுகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. வவுனியா மாவட்டத்தில் எட்டு முறைப்பாடுகளும், மன்னார் மாவட்டத்தில் எட்டு முறைப்பாடுகளும், முல்லைத்தீவில் ஒரு முறைப்பாடும் கிடைக்கப்பெற்றுள்ளன. எனினும் அவை பாரதூரமான முறைப்பாடுகள் அல்ல. தேர்தல் வன்முறைகள் எவையும் பதிவாகவில்லை" - என்றார். (அ-ம-110)

### வீதியின்...

வல்லை - அராலி வீதியில் தெல்லிப்பழை - கட்டுவன் சந்தியில் இருந்து அச்சுவேலி - தோலகட்டி சந்தி வரையிலான வீதி கடந்த 34 வருடங்களுக்கு மேலாக இராணுவ உயர்பாதுகாப்பு வலயத்தினுள் காணப்படுகிறது. இந்த வீதியில் வயாவிளான் சந்தியில் இருந்து அச்சுவேலி - தோலகட்டி சந்தி வரையிலான சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரமான வீதியே நேற்றுத்திறந்து விடப்பட்டுள்ளது. மிகுதி வீதி இன்னமும் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டுக்குள்ளேயே காணப்படுகிறது. எனவே, இந்த வீதியை முற்றுமுழுதாக விடுவிப்பதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

வயாவிளான் சந்தியில் இருந்து பலாலி வடக்குப் பகுதிக்குச் செல்லும் பலாலி வீதியையும் முற்றாக மக்கள் பாவனைக்கு இராணுவத்தினர் திறந்துவிட வேண்டும். அதேவேளை நேற்றுத் திறக்கப்பட்ட வீதியின் இரு பகுதிகளிலும் மக்கள் மீள்குடியேற அனுமதிக்கப்படவில்லை. அத்துடன் வீதியோரமாக உள்ள ஆலயங்களில் வழிபாடு செய்யவும் அனுமதிகள் மறுக்கப்பட்டுள்ளன. எனவே மீள்குடியேற்றங்களும் விரைவாகச் செய்யப்பட வேண்டும் - என்றனர். (அ-ம-26)

### அச்சுவேலி...

வீதி விடுவிக்கப்பட்டதைத் தொடர்ந்து அந்தப் பகுதி மக்கள் பொங்கலிட்டு தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்கள். தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சுமந்திரனும் இந்தக் வீதி விடுவிப்பில் கலந்துகொண்டார். எந்தவொரு ஆரவாரமும் இல்லாமல், பந்தல்கள், மேடை அலங்காரங்கள் இல்லாமல் இந்த வீதி விடுவிப்பு இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

### குடிதண்ணீர்த்...

எந்திரி கலாநிதி சுப்பிரமணியம் சிவகுமார் எழுதிய 'வடக்கு மாகாண நீர் வளங்களும் அவற்றின் பயன்பாட்டு உத்திகளும் பங்கீட்டுக் கொள்கையும்' எனும் இருமொழி நூல் வெளியீட்டு விழா அண்மையில் இடம்பெற்றது. நிகழ்வில் உரையாற்றும்போதே, வடக்கு ஆளுநர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"கடந்த வருடமும் இரணைமடுக் குளத்தில் இருந்து அதிகளவான நீர் கடலுடன் கலந்துவிட்டதாக அறியமுடிகிறது. எனவே, இனிவரும் காலங்களில் நீர்வளத் திட்டமிடலில் கவனம் செலுத்த வேண்டிய தேவையுள்ளது. திட்டங்களால் பாதிப்புகள் ஏற்படாத வகையில் செயற்பாடுகளை மேற்கொள்ளவேண்டும்.

வடக்கு மாகாணத்தில் மழை கிடைக்கின்ற காலப்பகுதிகளில் குளங்களில் இருந்து அதிகளவு நீர் வெளியேற்றப்படுகிறது. இவ்வாறு வெளியேற்றப்படும் நீரைக் குளங்களில் சேமித்து வைக்கச் சரியான பொறிமுறைகள் உருவாக்கப்படுதல் வேண்டும். இதற்காகக் குளங்களின் கொள்ளவை அதிகரிக்கவேண்டும்.

உலகின் பல பிரதேசங்களில் நீர்வளம் குறைவாகக் காணப்பட்டாலும் அவை பொருளாதார ரீதியில் முன்னேற்றம் அடைந்துள்ளன. எமக்கு அனைத்து வளங்களும் இருந்தும் அதனைச் சரியான விதங்களில் கையாளாமல் எமது பிரதேசம் பின்தங்கிக் காணப்படுகின்றது. எமது பிரதேசங்களில் நீர்வளம் இருந்தும் நாங்கள் உரிய திட்டமிடல் இன்றி முறையாகப் பயன்படுத்தாமல் இருக்கின்றோம். நீர்வளத்தின் தரம், அளவு ஆகிய இரண்டும் மிகவும் முக்கியமானவை. எனவே, எதிர்காலத்தில் எங்களுக்குக் கிடைக்கின்ற நீரை இயன்ற அளவு பயன்படுத்தக் கூடிய வகையில் சேமித்துப் பயன்பெறுவதன் மூலம் உச்சப் பயன்பாட்டைப் பெற்றுக்கொள்ள உரிய செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்படவேண்டும்" - என்றார். (அ-ம-66)

### வடமராட்சி...

வியான மேரி றீற்ரா (வயது-54) என்பவருமே இவ்வாறு கொல்லப்பட்டனர். சந்தேகநபர்கள் மூவரும் நேற்று பருத்தித்துறை நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டனர். வழக்கை விசாரித்த பதில் நீதிவான் நடராஜா ரஜீவன், சந்தேகநபர்கள் மூவரையும் நவம்பர் மாதம் 14ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (அ-ம-100-26)

### ரயில்...

நபரே இவ்வாறு ரயில் மோதியதில் உயிரிழந்துள்ளார். அவர் செவிப்புலன் குறைபாடு உடையவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமச்சிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துக்களை நிராகரித்து செயற்படுகின்றார் கமலா

## ட்ரம்ப் பரபரப்புக் குற்றச்சாட்டு



**வொஷிங்டன், நவ. 2**

**கமலா ஹரிஸும், ஜோ பைடனும் உலகம் முழுவதும் உள்ள இந்துக்களைப் புறக்கணித்துச் செயற்படுகின்றனர் என்று டொனால்ட்ட்ரம்ப்குற்றஞ்சாட்டியுள்ளார்.**

அமெரிக்க அதிபர் தேர்தல் நவம்பர் மாதம் 5ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில், தீவிரமான தேர்தல் பரப்புரைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்த நிலையிலேயே, அமெரிக்க அதிபர் பைடனும், துணைஅதிபரும், அதிபர் தேர்தலில் ஜனநாயகக் கட்சியின் வேட்பாளராகவும் உள்ள கமலா ஹரிஸும் அமெரிக்காவில் உள்ள இந்துக்களையும், உலகளவில் உள்ள இந்துக்களையும் புறக்கணித்துள்ளதாக ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

வங்கதேசத்தில் இந்துக்கள், கிறிஸ்தவர்கள் மற்றும் இன்னபிற சிறுபான்மை மக்களுக்கு எதிரான தாக்குதல்கள் மற்றும் கொள்ளைச் சம்பவங்களை நான் வன்மையாக கண்டிக்கிறேன். அந்த நாட்டில் இன்னும் ஒரு குழப்பமான நிலை நீடிக்கிறது. ஆனால், இது தொடர்பில் உலகத்தலைவர்கள் அக்கறைப்படவில்லை. நான் அதிகாரத்தில் இருந்திருந்தால், நிச்சயமாக இதையெல்லாம் அனுமதித்திருக்க மாட்டேன் என்று ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

தீவிர இடதுசாரிகளின் மத எதிர்ப்புக் கொள்கையை நான் கடுமையாக எதிர்ப்பேன். மக்களின் சுதந்திரத்துக்காக நான் போராடுவேன். எனது நிர்வாகத்தின் கீழ், இந்தியாவுடனும், எனது நல்ல நண்பருமான பிரதமர் மோடியுடனும் கூட்டாண்மையை வலுப்படுத்துவேன். ஆனால், கமலா ஹரிஸ் ஆட்சிக்கு வந்தால் அவர் நிச்சயம் வணிகங்களை அழித்துவிடுவார் என்றும் ட்ரம்ப் மேலும் தெரிவித்துள்ளார்.

(ம)

# தீபாவளி விடுமுறையில் பாகுபாடு காட்டப்படுகிறது

## சிவசேனை அமைப்பின் வேட்பாளர் சிறீந்திரன் கண்டனம்

யாழ்ப்பாணம், நவ.2

தீபாவளி திருநாளில் மலையகப் பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட்ட போதிலும் இந்துக்கள் செறிந்து வாழும் வடக்கு மாகாணத்துக்கு வழங்கப்படவில்லை. சைவ மரபுகளை அழிக்கும் செயற்பாடாகவே இதனைக் கருத வேண்டியுள்ளது - இவ்வாறு சுயேச்சைக் குழு - 12 இன் முதன்மை வேட்பாளரான என்.பி. சிறீந்திரன் தெரிவித்துள்ளார்.


அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த மண்ணில் சைவ மரபுகளைத் திட்டமிட்டு அழிப்பதிலும் இடையூறு செய்வதிலும் மதக் காழ்ப் புணர்ச்சியை ஏற்படுத்துவதிலும் சமய முரண்பாடுகளைத் தோற்றுவிப்பதிலும் பல திட்டமிட்ட செயல்கள் அரங்கேறுகின்றன. இதனைத் தடுக்கவேண்டும்- என்றார்.

(ச)


பதிவுகள் ஆரம்பமாகிவிட்டன
அமெரிக்க லொத்தர் இலவச விசா
காத்திருக்காமல் உடனே பதியுங்கள்
2026ல் நீங்களும் அமெரிக்காவில்
18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புக்கள்
இந்த வருடம் A/L எடுக்கிறவர்களும் விண்ணப்பிக்கலாம்
V2 Travels
0768226244

## விவசாயிகளுக்கு



சீனாவில்(China) இருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட 4 ஸ்ரோக் (4 STROKE) பவர் ஸ்பிறேயர் (Power sprayer) 20 லீற்றர். மெல்லிய சத்தத்துடன் நிம்மதியாக வேலை செய்ய, இலங்கையில் முதன் முறையாக அறிமுகப்படுத்துகின்றோம்.

அத்துடன்

இந்தோனேசியாவில் இருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட விவசாய மருந்து தெளிகருவி (Sprayer) 17 லீற்றர். சில்வர், பிளாஸ்டிக்காலானதும் பற்றறி இணைக்கப்பட்டதும் மற்றும் இணைக்கப்படாததும் விவசாய ஆராய்ச்சி நிலையத்தினால் (FMRC) அங்கீகாரம் அளிக்கப்பட்டதுமான தெளிகருவி இப்பொழுது எம்மிடம் உத்தரவாதத்துடன்.

"எம்மவரின் தெரிவு எமக்கே தெரியும்"

ஆர்க். என். கம்பனி

150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4021
A9 வீதி, எழுதுமட்டுவாழ். 070 191 3571
A9 வீதி, பரந்தன் சந்தி, பரந்தன். 021 228 2020
Hotline : 071 535 7799/ 071 973 9917

## மணமகள் தேவை

யாழ். இந்து (P) சேர்ந்த 1987 ஆம் ஆண்டு பிறந்த உத்திரட்டாதி நட்சத்திரம் மீனம் இராசியில் பிறந்த சொந்தமாக வெல்டிங் வேலை செய்யும் மணமகனுக்கு மணமகள் தேவை. (யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த மணமகள் தேவை)

077 579 5422, 077 337 9686

(cs.20205) (N-1)

## ஸ்ரீ லங்கா தொழிலாளர் கட்சி
## பாராளுமன்ற தேர்தல் - 2024
## வன்னித் தேர்தல் மாவட்டம்



மல்லாவி
பிள்ளையார் ஸ்ரோர்ஸ் உரிமையாளர்

எங்கள் வன்னி
எங்கள் மக்களுக்கு

## தி.இடபாருடன்



1 2 3 4 5 6 7 8 9


## மரண அறிவித்தல்

தோற்றம்
19 . 02 . 1949



மறைவு
29 . 10 . 2024

### சுப்பிரமணியம் இரத்தினராசா (கோபால்)

காரைநகர் கோவளத்தை பிறப்பிடமாகவும் இல.324, நாவலர் வீதி, ஆனைப்பந்தி யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் இரத்தினராசா (கோபால்) கடந்த 29.10.2024 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - மீனாட்சி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், சந்திரகுமாரியின் அன்புக் கணவரும், சாந்தினி (லண்டன்), சர்மிளா (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ரவீந்திரகுமார் (லண்டன்), சஜேந்திரகுமார் (கனடா) ஆகியோரின் மாமனாரும், அஸ்வின், ரஜிரா, மயூரன், ஜனனி ஆகியோரின் பேரனும், காலஞ்சென்றவர்களான தவரத்தினம், தவமணி மற்றும் தவராசா, சிவமணி ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்றவர்களான பாலேந்திரன், ஜெயக்குமாரி மற்றும் சுரேந்திரன், ரவீந்திரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.1.2024) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**077 031 0394**
ரவி - மருமகன் - + 44 7919 551646
கண்ணன் - மருமகன் - + 416 8348 570

(CS/29212) N-1

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : .news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 02.11. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.